# வழிகாட்டும் விளையாட்டு வீரர்கள்




எஸ். நவராஜ் செல்லையா M.A., D.P.E., M.P.Ed.

# வழிகாட்டும் விளையாட்டு வீரர்கள்

எஸ். நவராஜ் செல்லையா
M.A., D.P.E., M.P.Ed.

ராஜ்மோகன் பதிப்பகம்
சென்னை-17

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | — | VAZHIKATTUM VILAIYATTU VEERARKAL |
| Author | — | S. NAVARAJ CHELLIAH |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Date of Publication | — | January 1980 |
| Copyright | — | S. NAVARAJ CHELLIAH |
| Paper Used | — | 10.9 Kg. Seshasayee |
| Size | — | 17.5x12 cm |
| Type Points | — | 10 Points |
| Pages | — | 80 |
| Copies | — | 1200 |
| Printer | — | PANDURANGAN<br>Lalitham Press &<br>Publications, Madras-5. |
| Publisher | — | RAJMOHAN PATHIPPAGAM<br>10, Ranganathan Street,<br>T. Nagar, Madras - 17. |
| **Price** | -- | **Rs. 3-25** |
| Subject | — | History about world Champions in Sports & Games |
| Special Information | — | Suitable for Non-Detailed Study in School & Colleges |

# முன்னுரை

வழிகாட்டும் விளையாட்டு வீரர்கள் எனும் தலைப்பில் அமைந்த இந்நூல், வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிகளை உருவாக்கிய, உலகப் புகழ்பெற்ற வீரர்கள் வீராங்கனைகள் பற்றிய வாழ்க்கைக் குறிப்புப் பெட்டகமாகும்.

'நான் எப்படி இருந்தேன் தெரியுமா' என்று தன்னைப் பற்றிய பழம்புராணப் பேசித் தருக்கித் திரிந்து, தற்காலத்தில் தடுக்கி விழுகின்ற தரங்கெட்ட நிலையில் உழல்கின்ற மனிதர்களை சுமந்து திரிகின்ற தரணியில், 'எப்படி இருந்தேன் என்பதில் எழிலுமில்லை, ஏற்றமுமில்லை. எப்படி இன்று இருக்கிறேன் என்பதிலே தான் எல்லா சிறப்பும் திறமையும் இசைபாடுகின்றன' என்று சொல்வதைப் போல செய்து காட்டிய, செழுமை ஊட்டிய வீரர்களின் விவேகம் நிறைந்த வீர வரலாற்று நிகழ்ச்சிகள்தான் இதில் இடம் பெற்றிருக்கின்றன.

'உண்மையான லட்சியத்தை உவந்து உள்ளத்தில் ஏற்றுக் கொண்டால், ஏற்றிக்கொண்டால், உலகம் காட்டும் எதிர்ப்பும், வறுமை காட்டும் மறுப்பும், வஞ்சகம் நிரப்பும் புரட்டும், நோய்கள் பழிக்கும் மிரட்டலும் எல்லாம் எதிர் நில்லாது ஒழிந்துபோம், இறுதியில் லட்சியமே ஜெயிக்கும், என்று, உண்மையை நிலைநாட்டிப் புகழ் பெற்ற வீரர்களின் பட்டியலையே இங்கு தொகுத்துத் தந்திருக்கிறேன்.

லட்சியம் இல்லாத வாழ்க்கை விலங்கு வாழ்க்கையாகும். நெறிமுறையில்லாத வாழ்க்கை 'பேய்பிடித்த குரங்கின் செயல்களை விடக் கீழ்மை நிறைந்ததாகும்.

ஆறறிவு படைத்த அரிய இனம் மனித இனம் என்பது உண்மையென்றால், அனைவரும் அறிவார்ந்த வாழ்வு வாழ்ந்தால்தானே வாழ்வு இனிக்கும், சிறக்கும். அவ்வாறு இனிக்கும் வாழ்வுக்கும், சிறக்கும் பயணத் திற்கும் வழிகாட்டியாய் அமைவது லட்சியங்களே.

இத்தகைய லட்சியங்களுடன் வாழ்ந்து காட்டிய வீரர்களும் வீராங்கனைகளும், இன்று உலக சாதனை பொறித்தவர்களாக, உன்னத இடத்தை வரலாற்றில் பிடித்தவர்களாக, பிறந்ததன் பயனைப் பெற்றவர்களாக வாழ்கின்றார்கள்.

அவர்களது வாழ்க்கையும் வழிநடைப்பயணமும், நமக்கெல்லாம் நல்லதோர் எழுச்சியையும், உணர்ச்சி யையும் ஊட்ட வேண்டும் என்பதற்காகவே இந்த நூலை எழுதிட முயன்றேன்.

ஏழ்மையிலும், இல்லாமையிலும், இயலாமையிலும் உதித்தவர்கள், உள்ளத்திண்மை கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைத்து வெற்றி பெற்ற வரலாறு, நமக்கெல்லாம் தோன்றாத் துணையாயிருக்கிறது.

மேன்மையடைந்த வீரர்கள் வீராங்கனைகள் மேற் கொண்ட வழிகளையும் முறைகளையும் நாம் புரிந்து கொள்வதுடன், போற்றி மகிழ்வதுடன் நின்றுவிடாது, 'நாமும் வரலாம், வரமுடியும்' என்ற நம்பிக்கையுடன் லட்சியப் பயணத்தைத் தொடங்க வேண்டும்.

இத்தகைய இனிய முயற்சியை மேற்கொள்பவர்கள் உடலால் வளம் பெறுகின்றார்கள். மனதால் நலம் பெறுகின்றார்கள். அன்றாட வாழ்வில் அமைதி காணு கின்றார்கள். ஆனந்தம் அடைகின்றார்கள். தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும், சமுதாயத்திற்கும் தாயகத்திற்கும் பயனுள்ள மக்களாய் வாழ்கின்றார்கள்.

இவ்வளவும் பெற்றுவிட்டால், இவ்வுலகில் வேறென்ன வேண்டும் என்று விரும்பத் தூண்டும்! அத்தகைய தூண்டா மணி விளக்குகளாய் தோன்றி,

தூய வழிகாட்டிய வீரர்களைப் போற்றுவோம். அவர்தம் அரிய பாதையில் நடைபோடுவோம். புகழ் சூடுவோம், என்று இளைஞர்கள் படைகிளம்பி விட்டால், தமிழகம் தரணியில் தலையாய இடத்திலல்லவோ திகழும்!

எனது கனவு நனவாக, என் நூல்களைப் படைத்து விடுகிறேன். கனவு நனவாகும் காலம் விரைவில்வர இருக்கிறது. அப்பொற்காலத்தை மனக் கண்ணால் கண்டு மகிழ்கிறேன்.

இந்நூல், எனது அரிய முயற்சியின் விளைவாகத் தோன்றி, இன்று தமிழகத்தில் உலாவருகின்ற விளையாட்டுக் களஞ்சியம் எனும் மாத இதழில், மாதந் தோறும் வெளிவந்த தலைப்புக் கட்டுரைகளின் அரிய தொகுப்பாகும்.

இந்நூல் வெளிவருவதற்கும் அருகிலிருந்து உதவிய திரு. சாக்ரட்டீசுக்கும், அச்சிட்டுத் தந்த திரு. பாண்டு ரங்கனுக்கும் எனது அன்பு கலந்த நன்றி.

எழுதிய நூல்கள் அனைத்தும் தமிழக நூலகங்களில் இடம் பெறும் வண்ணம் உதவி உற்சாகம் ஊட்டிவரும் தமிழகப் பொது நூலகத்துறை இயக்குநர் திரு. வே. தில்லைநாயகம் அவர்களுக்கும், எனது மனங் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

விளையாட்டுத் துறை தமிழ் இலக்கியமாக நிறைய தமிழ் நூல்கள் வரவேண்டும் என்று எழுதி வரும் என் முயற்சிக்கும் ஊக்கத்திற்கும் உறுதுணையாக இருக்கும் தமிழ் கூறும் நல்லுலக மக்கள் அனைவருக்கும், என் அன்பு வணக்கத்தைப் படைக்கிறேன்.

1—1—1980
ஞான மலர் இல்லம்
சென்னை-17

எஸ். நவராஜ் செல்லையா

## ஆசிரியரின் பிற நூல்கள்

| | | ரூ. | பை |
|---|---|---|---|
| 1. | கால்பந்தாட்டம் (Foot Ball) | 4 | 00 |
| 2. | கைப்பந்தாட்டம் (Volley Ball) | 4 | 00 |
| 3. | கூடைப் பந்தாட்டம் (Basket Ball) | 4 | 00 |
| 4. | வளைகோல் பந்தாட்டம் (Hockey) | 4 | 00 |
| 5. | கிரிக்கெட் ஆட்டத்தில் கேள்வி பதில் (Cricket) | 4 | 00 |
| 6. | கேரம் விளையாடுவது எப்படி (Carrom) | 4 | 00 |
| 7. | சதுரங்கம் விளையாடுவது எப்படி (Chess) | 4 | 00 |
| 8. | பூப்பந்தாட்டம் (Ball Badminton) | 5 | 00 |
| 9. | கோகோ ஆட்டம் (Kho-Kho) | 5 | 00 |
| 10. | மென் பந்தாட்டம் (Soft Ball) | 6 | 00 |
| 11. | நீங்களும் ஒலிம்பிக் வீரராகலாம் (Athletics) | 6 | 00 |
| 12. | வளையப் பந்தாட்டம் (Tenikoit) | 2 | 50 |
| 13. | விளையாட்டுக்களின் விதிகள் | 14 | 00 |
| 14. | விளையாட்டுக்களின் கதைகள் (பாகம் 1) | 4 | 50 |
| 15. | விளையாட்டுக்களின் கதைகள் (பாகம் 2) | 4 | 50 |
| 16. | ஒலிம்பிக் பந்தயத்தின் கதை (மத்திய அரசு பரிசு பெற்ற நூல்) | 3 | 00 |
| 17. | விளையாட்டுகளுக்குப் பெயர் வந்தது எப்படி | 3 | 25 |
| 18. | விளையாட்டு விருந்து | 5 | 00 |
| 19. | விளையாட்டுக்களில் விநோதங்கள் | 3 | 50 |
| 20. | விளையாட்டுக்களில் வினாடி வினா விடை | 3 | 00 |

| | | | |
|---|---|---|---|
| 21. | விளையாட்டு விழா நடத்துவது எப்படி | 5 | 00 |
| 22. | பாதுகாப்புக் கல்வி | 2 | 50 |
| 23. | விளையாட்டு அமுதம் | 3 | 50 |
| 24. | விளையாட்டு உலகம் | 3 | 50 |
| 25. | விளையாட்டுச் சிந்தனைகள் | 3 | 00 |
| 26. | நீங்களும் உடலழகு பெறலாம் | 3 | 00 |
| 27. | பெண்களும் பேரழகு பெறலாம் | 4 | 00 |
| 28. | உடலழகுப் பயிற்சி முறைகள் | 3 | 25 |
| 29. | பயன் தரும் யோகாசனப் பயிற்சிகள் | 5 | 00 |
| 30. | தொந்தியைக் குறைக்க சுலபமான வழிகள் | 2 | 25 |
| 31. | எதற்காக உடற்பயிற்சி செய்கிறோம் | 2 | 00 |

## பொழுது போக்கு சிறு விளையாட்டுக்கள்
(Minor Games)

| | | | |
|---|---|---|---|
| 32. | கூடி விளையாடும் குழு விளையாட்டுக்கள் | 4 | 00 |
| 33. | ஒரு நூறு சிறு விளையாட்டுக்கள் | 5 | 50 |
| 34. | விளையாட்டு உலகில் வீரக்கதைகள் | 3 | 00 |
| 35. | கிரிக்கெட் ஆட்டத்தின் கதை | 4 | 00 |
| 36. | வழிகாட்டும் விளையாட்டு வீரர்கள் | 3 | 25 |
| 37. | நல்ல நாடகங்கள் (நாடகம்) | 2 | 25 |
| 38. | செங்கரும்பு (கவிதை) | 2 | 00 |
| 39. | நல்ல கதைகள் (பாகம் 1) | 1 | 50 |
| 40. | நல்ல கதைகள் (பாகம் 2) | 1 | 50 |
| 41. | நல்ல கதைகள் (பாகம் 2) | 1 | 50 |

# உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | தோற்றாலும் தொடர்வேன் .... | 9 |
| 2. | கலங்காத கரிகாலன் ... | 13 |
| 3. | கண்டேன் கொண்டேன் ... | 17 |
| 4. | வெற்றி பெறுவரை விடமாட்டேன் | 21 |
| 5. | தணியாத தாகம் ... | 25 |
| 6. | கொடுத்தலும் கெடமாட்டேன் .... | 29 |
| 7. | சோதனைக்குள் சாதனை ... | 42 |
| 8. | அழைப்பும் உழைப்பும் .... | 47 |
| 9. | தொடேன் விடேன் ... | 51 |
| 10. | தொட்டதும் தொடர்ந்ததும் .... | 56 |
| 11. | பெருந்தன்மையும் பேராண்மையும் | 60 |
| 12. | நாட்டுக்கு நாமென்ன செய்தோம் | 65 |
| 13. | எனக்கும் ஓர் இலட்சியம் ... | 69 |
| 14. | வரலாறு மலைக்கிறது ... | 73 |

# 1. தோற்றாலும் தொடர்வேன்!

உலகப் புகழ்பெற்ற வீரர்களாக இருந்தாலும், ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்றால், நடத்தப் படுகின்ற தேர்வுப் போட்டியில் கலந்துகொள்ள வேண்டும், திறமையைக் காட்ட வேண்டும், வகுத்திருக்கும் தகுதிக்கு மேலே வந்தாக வேண்டும் என்பது மரபு. அந்த மரபுப்படி, 1948ஆம் ஆண்டு இலண்டன் மாநகரத்தில் நடக்கவிருந்த ஒலிம்பிக் பந்தயத்திற்கான வீரர்களின் தேர்வானது, அமெரிக்காவிலே நடைபெற்றது.

'ஜெகம் புகழும் வீரன், 'ஜெசி ஓவன்ஸ்' பிறந்த ஊரில் நானும் பிறந்தேன்' என்று பெருமை பேசிக்கொண்டாலும், இதுவரை உயரத்தடைதாண்டும் 110 மீட்டர் போட்டியில் (High Hurdle) 82 தடவைக்குமேல் வெற்றி பெற்று பலமுறை உலகசாதனை செய்திருக்கிறேன். இதுவரை என்னைப்போல் யாருமில்லை, என்று புகழ்ந்து கொண்டாலும், அந்த வீரனும் வந்து கலந்து கொண்டாக வேண்டும்' என்ற கட்டாய நிலையிலே அவனும் வந்திருந்தான்.

'என்னைத்தான் உங்களுக்குத் தெரியுமே, நான் ஏன் தேர்வுக்கு வரவேண்டும், என்று அவனும் கூறவில்லை. கூறியிருந்தாலும் அதை அனுமதிக்கத் தேர்வுக் குழுவினரும் தயாராக இல்லை. பயிற்சி முகாமுக்கு வராதவர்களை

வாவென்று வற்புறுத்தி அழைப்புக் கொடுத்தும், வராத பொழுது 'சேர்க்க மாட்டோம்' என்று அறிவிப்பு விடுத்தும், விடுத்த மறுநாளே அவர்களை சேர்த்துக்கொண்டும் வெளி நாட்டுப் பயணம் போகின்ற நம்நாட்டு மரபுகளையும் அவ்வப்போது பார்த்திருக்கிறோம். ஆனாலும், அந்தத் தேர்வு முறை, மிகவும் கடுமையான விதிமுறைகளுடனே அங்கே நடத்தப்பெற்றது.

பால்ட்வின் வாலஸ் என்னும் கல்லூரி மாணவனை அவனது பெயர் ஹேரிசன் தில்லார்டு (Harrison Dillard) என்பதாகும். எலும்பும் தோலுமாகத் தோற்றமளித்து ஒல்லியாக அவன் இருந்ததால் Bony Dillard என்றும் செல்லமான பட்டப் பெயருடன் அனைவராலும் அழைக்கப்படுவதும் உண்டு.

'இவனுக்கு முன்னே தடைதாண்டும் போட்டியில் இது வரையில் யாரும் ஓடியதில்லை' என்ற புகழ்மாலை சூடியிருந்த ஹேரிசன், தேர்வுக்கு வந்திருக்கிறான் என்பதையறிந்து, தைரியமாக வந்தவர்கள் பலர் என்றாலும், தேர்வு பெறுவோம் என்ற நம்பிக்கை சிறிதும் இன்றியே கலந்து கொண்டார்கள்.

'மனிதன் நினைக்கிறான். இறைவன் அழிக்கிறான்' என்ற முதுமொழிபோல, தில்லார்டு நினைத்தது நடக்கவில்லை. போட்டியிடும் மற்ற வீரர்கள் மருண்டது போல அங்கு நடக்கவில்லை. எவரும் எதிர்பார்க்காத ஒரு நிகழ்ச்சி அந்நாளிலே நடந்தபோது, அனைவருமே அதிர்ச்சிக்கு ஆளாயினர். 'இப்படியும் நடக்குமா' என்று மடிமீது இடி விழுந்த நிலைபோல மயங்கி நின்றனர்.

ஒலிம்பிக் பந்தயத்திலேயே தங்கப்பதக்கம் பெறும்வீரன் என்று அமெரிக்கர்கள் மட்டுமல்ல, அகில உலகத்தினரே எதிர்பார்த்துக் கொண்டு இருந்த வீரனை தில்லார்டு, 110 மீட்டர் தடை தாண்டும் போட்டி தொடங்கி ஓடத் தொடங்கியவுடன், முதல் தடையைத் தாண்டினான். இரண்டாம் தடையில் இடித்துக் கொண்டான்.

துடித்துநின்றான். லயமாகத் தாண்டிச் செல்லும் லாவகத்தை இழந்து நின்றான்.

தடைமீது நடப்பது போன்ற லாவகம் அன்று அவனிடம் இல்லை. மீண்டும் இரண்டு தடைகளில் தட்டுத் தடுமாறி ஓடியபோது, அவனால் தோற்க முடிந்ததே தவிர, அந்த முடிவினை ஏற்க முடியவில்லை. எல்லோருக்கும் ஏற்பட்ட ஏமாற்றம் போல, அவனும் ஏமாற்றத்தின் எல்லைக்குச் சென்று, யார் கண்ணிலும் படாமல் வெறுப்புடன் மறைந்து கொண்டான்.

அமெரிக்கப் பிரதிநிதியாக இலண்டன் செல்லும் ஆசை அந்தத் தோல்வியுடன் ஓய்ந்து ஒழிந்தது. 82 முறை வென்ற வீரன் 83வது முறையாக வெல்லும் பாக்கியம் இல்லாமல் போனதுடன், பெரும்புகழ் பறிக்கப்பட்டு விட்ட தோல்வியைத் தாங்கியவாறு மீண்டும் அங்கே வந்தான். போனதைப்பற்றிப் புலம்புவதற்காக அல்ல! 'தோற்றாலும் தொடர்வேன்' என்று ஓர் செய்தியைச் சொல்ல.

அடுத்து நடக்க இருந்தது 100 மீட்டர் ஓட்டம். அதில் உலக சாதனை நிகழ்த்தியிருந்த மெல்பேட்டன் (Melpatton), மற்றும் சிறந்த வீரனாக பார்னி ஈவல் (Barney Ewell) என்பவர்கள் நிச்சயம் வெற்றி வீரர்கள் என்று ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டது போன்ற உறுதியுடன் அமைந்திருந்த போட்டி அது. அதில் நானும் கலந்துகொள்ளப் போகிறேன் என்று தில்லார்டு வந்து நின்றதும், அதிர்ச்சிக்கு ஆளானவர்கள் ஆச்சரியத்துடன் நின்றார்கள்.

தோல்வியைத் தாங்கிக்கொண்ட நெஞ்சம், துணிந்து இன்னும் ஒரு போட்டிக்கு, இதுவரை போட்டியிடாத போட்டி நிகழ்ச்சியில் வரச் செய்திருக்கிறது என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். ஜெசி ஓவன்ஸ்போல விரைவோட்டக்காரன் (Sprint) ஆவதற்கு முதலில் முயன்றபோது, அவனது பயிற்சியாளர்தான் தடைதாண்டும் போட்டியில் ஈடுபடுத்தினார். அதன் பின்னேதான் அதில் பழகிப் புகழ்பெற்ற வீரனாக மாறினான் ஹேரிசன் தில்லார்டு.

அந்த அனுபவம், ஆற்றல், ஆண்மை ஆவேசம் எல்லாம் ஒன்று சேர்ந்து 100 மீட்டர் ஓட்டத்தில் ஈடுபடுத்தி விட்டது. முடிவு? உலகசாதனை செய்த வீரர்களை பின்னடையச்செய்து விட்டு, தில்லார்டு முதல் வீரஞக வந்து விட்டான். தோற்ற வன் துணிந்தான். தொடர்ந்தபின் வென்முன். லண்டன் மாநகருக்குச் சென்முன். அந்த ஒலிம்பிக் பந்தயத்திலும் 100 மீட்டர் நிகழ்ச்சியில் வென்முன். உலகப்புகழ் கொண்டான்.

அத்துடன் நிறுத்திக்கொள்ளவில்லை. அவன் நிம்மதி யடைந்துவிடவுமில்லை. 1952ஆம் ஆண்டு 29 வயதானவீரஞக இருந்த தில்லார்டு, அதே 110 மீட்டர் தடை தாண்டும் போட்டியில் அமெரிக்கப் பிரதிநிதியாக மீண்டும் ஹெல்சிங்கி எனும் நகருக்கு வந்து, முன்னே வாய்ப்பிழந்த தடை தாண்டும் போட்டியில் வென்று தங்கப்பதக்கத்தையும் பெற்முன். பெருமையுற்முன்.

இதுவரை இரண்டு விரைவோட்டங்களில் (ஒன்று 100 மீட்டர் மற்றென்று 110 மீட்டர் தடைதாண்டி ஓட்டம்) தங்கப்பதக்கம் பெற்றவர்கள் தரணியிலே கிடையாது என்ற பொன்னாவிய புகழைப் பெற்முன். நீக்ரோ இனத்தில் ஏழைக் குடும்பத்தில் தோன்றிய ஹேரிசன் தில்லார்டு, கலங்காத நெஞ்சினஞக விளையாட்டுத் துறையில் விளங்கிஞன்.

'தோற்றாலும் தொடர்வேன்' என்று துணிந்து நின்று, தேர்வுக்குச் சென்று, தேறி வந்து, இரண்டு ஒலிம்பிக் பந்தயங்களில் வென்று உலகப் புகழ்பெற்ற வீரனை நாமெல்லாம் நினைந்து நினைந்து வீரநெஞ்சம் பெறுவோம். விவேகமுடன் பயிற்சிசெய்வோம். வாழ்வோம். வாழ்வில் நாமும் முன்னேறு வோம் என்று இன்றே சபதம் எடுப்போமாக!

# 2. கலங்காத கரிகாலன்!

இணைபிரியாத சகோதரர்கள் அவர்கள். அபூர்வ சகோதரர்கள் என்று அழைக்கப்படாவிட்டாலும், அன்புச்சகோதரர்கள் என்று பலராலும் பாராட்டப்பட்டவர்கள். கல்விக்காக எந்தக் கஷ்டமும் படலாம் என்று நமது முன்னோர்கள் கூறியிருப்பது போல அந்தச்சிறுவர்களான சகோதரர்களும் வீட்டுக்கு அருகிலேயே பள்ளிக்கூடம் இல்லையென்பதால், தினமும் மூன்று மைல் தூரம் நடந்து சென்று, படித்து விட்டுத் திரும்பக்கூடிய சூழ்நிலையில் சென்று வந்தார்கள்.

காலையிலும் மாலையிலும் வீட்டுக்கும் பள்ளிக்கும் இடையே மூன்று மைல் தூரம் நடக்கவேண்டிய நிலையை, அவர்கள் ஓடியே சென்று விடுவார்கள் என்றால், அவர்களுடைய சுறுசுறுப்பான தேகத்தையும் மனோவேக நிலையையும் தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களின் ஓட்டத்திற்கும் நடைக்கும் இடையே விளையாட்டுக்களும், வேடிக்கை நிகழ்ச்சிகளும் அவ்வப்போது நடந்து கொண்டேயிருக்கும். இவ்வாறு அதிக தூரத்தைத் தங்கள் வேடிக்கையான விளையாட்டு நிகழ்ச்சிகளால் மறந்து படித்துக் கொண்டு வரும் நாட்களில் ஓர் நாள்!

சிறுவர்கள் இருவரும் அமெரிக்காவில் எல்கார்ட் என்னுமிடத்தில் பிறந்தவர்கள். மூத்தவன் பெயர் ஃபிளாய்டு.

இளையவன் பெயர் கிளென் கன்னிங்காம். இருவரும் பள்ளியில் இருக்கும் பொழுது, எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்து விட்டது. அதிகக் குளிர் பகுதியான இடத்தில், உடலுக்கு வெது வெதுப்பு அளிப்பதற்காகக் குளிர் காய வேண்டும் என்பதற்காக அடுப்பு ஒன்று எரிந்துகொண்டிருக்கும். அதன் அருகே அமர்ந்து உடலை சூடுபடுத்திக்கொள்வது அவர்களிடையே சாதாரணமாக நடப்பது பழக்கம்தான்.

பக்கத்திலே கிடக்கும் நிலக்கரி துண்டுகள் அல்லது விறகுக்கட்டைகள் இருந்தால், அதை எடுத்து அடுப்பில் போட்டு அனலை அதிகமாக்கிக் கொள்பவரும் உண்டு. நமது விளையாட்டுச்சிறுவர்கள் அதில் போய் விளையாட்டைக்காட்டி விட்டார்கள். நிலக்கரித் துண்டை எறிவதற்குப் பதிலாக, பெட்ரோல் போன்று எளிதில் தீப்பற்றிக் கொள்கின்ற கெசோலின் (Gasolene) என்பதை எறிந்து விடவே, அடுப்பு தீப்பிழம்பைக் கொட்டி எரிந்தது. அந்தத் தீப்பிழம்பின் தழலில் மூத்தவன் பிளாய்டு வெந்து அதே இடத்தில் மாண்டு போனான். இளையவன் கன்னிங்காமோ, தீயில் வெந்தவனாகத் தூக்கியெறியப்பட்டான். உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த சிறுவன், உடனே மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டான்.

தீப்புண்களுக்குக் கட்டுகள் போட்டும், மயக்கம் தெளிந்தும் எப்படியோ ஒருவாறாக இளையவனை பத்திரமாக சாவிலிருந்து மீட்டுவிட்டாலும், காலிலே கட்டியிருந்த கட்டினை அவிழ்த்துப் பார்க்கும்பொழுது, காண பரிதாபமான நிலையில் இருந்தது.

இடது காலின் அடிப்பாகமான வளைவும் (Arch) அதன் பகுதிகளும் அப்படியே எரிந்து கரிந்து போய், ரணமாக இருந்தது. அதனைக்கண்ட மருத்துவர்கள் காலில் புண் ஆறிப்போனாலும், கன்னிங்காமால் இனி நடக்கவே முடியாது, என்று அவல அறிவிப்பு ஒன்றைக் கொடுத்தே விட்டார்கள்.

ஓராண்டு காலம் அந்த ரணம் ஆறாமல் உபத்திரவம் கொடுத்துக் கொண்டே வந்து ஒரு மாதிரியாக மறைந்து

போனாலும் அது தொடர்ந்து அளித்த வேதனை, வருடக்கணக் காக வந்து கொண்டேயிருந்தது. மருத்துவரின் அறிவிப்புக் குப் பிறகும், மருந்துக்குப் பிறகும், மாதாவின் அன்புப்பணி யும் அந்த இளைஞனைத் தொடர்ந்தே வந்தது.

ஆமாம்! ஒவ்வொரு நாளும், இரவிலும் அதிக நேரம் விழித்திருந்து, ஓய்வு கிடைக்கும் பொழுதெல்லாம், மகனின் கால்களை தடவிக் கொடுத்துக் கொடுத்து பணிவிடை செய்து வந்தாள்! அன்னையின் புனித நெஞ்சத்தின் ஆசையும், அன்பு மீறிடும் இடைவிடாப் பணியும், அந்தச் சிறுவனுக்கு ஆறுதலைக் கொடுத்ததுடன், ஆற்றலையும் மனதுக்கு அளித் துக் கொண்டே வந்தது.

தாயின் தனிச்சக்தி தந்த தெம்பும், தழும்பாகிப்போன ரணமும், அவனை நிற்கும் நிலையில் நிறுத்தியது. கால்களைத் தாங்கித் தாங்கி நடக்கத் தொடங்கினான். காலில் தசைகள் வளரத் தொடங்கியது. கெண்டைக்கால் சதையும் வளர்ந்து, உடலைத் தாங்கும் சக்திக்கேற்றவாறு சிறிது பலம் பெற்றுக்கொண்டது.

பதினொன்காம் வயது வரை இந்த போராட்ட வாழ்வில் இருந்த கன்னிங்காம், வேகமாக நடக்க, ஓடப் பழகிக் கொண்டான். அதாவது முன்னர் ஓடிய பழக்கத்தைத் தொடர்ந்து கொண்டான்.

ஒரு நாள் கடை ஒன்றில், தங்கப்பதக்கம் ஒன்று பார் வைக்காக வைக்கப்பட்டிருந்தது. எல்கார்ட் நகரத்தில் நடக்க விருக்கும் ஒரு மைல் பந்தயப் போட்டிக்கான தங்கப்பதக்கம் அது. அதில் கலந்து கொண்டு வெற்றிபெற வேண்டும் என்று விரும்பினான். ஓட்டப்பந்தயங்களில் கலந்து கொள்ளவேண் டும் என்ற வேகத்துடன் பயிற்சிகள் செய்ய ஆரம்பித்தான்.

அவ்வப்போது நடைபெறுகின்ற போட்டிகளில் கலந்து கொண்டு பல சுவையான அனுபவங்களைப்பெற்று, தன்னையும் வளர்த்துக்கொண்டான். பந்தயம் தொடங்க இருக்கும் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக இந்த இளைஞன், குறித்துக்

கொண்டே இருப்பதைப் பார்த்து பலர் கேலி பேசத்தொடங்கினார்கள். "எரிந்து கருகிப்போன என் கால்கள் பலம் அடைவதற்கு (Warm) நீண்ட நேரம் பிடிப்பதால்தான், இவ்வளவு பயிற்சிகளையும் செய்ய வேண்டியிருக்கிறது" என்று பதில் கூறிய கன்னிங்காம், அமெரிக்காவிலே சிறந்த ஒரு மைல் ஓட்டக்காரனுன்.

1936ம் ஆண்டு அமெரிக்க நாட்டின் பிரதிநிதியாக ஜெர்மனி சென்று 1500 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் தங்கப் பதக்கம் பெறுகின்ற வாய்ப்பை மிக்கக் குறைந்த தூரத்தில் இழந்தாலும், இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கம் வாங்கிய வீரனுகி சரித்திரம் படைத்தான்.

'உடலில் குறையுள்ளவர்கள்தான், உலகில் அதிக சாதனை புரிகின்ருர்கள்' என்று ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்து, தன்னை உதாரணமாக்கிக் காட்டினுன். குறையானது உடலிலே இருந்தாலும் உள்ளத்திலே நிறைவான எண்ணம் இருந்தால், உலகில் பல சாதனைகளை நிகழ்த்திட முடியும் என்று உலகுக்கு உணர்த்திய கன்னிங்காம், ஒலிம்பிக் சரித்திரத்தில் மட்டுமல்ல, உலகத்திலும் சிறந்த வீரர்களுக்கிடையே உன்னத மனிதனுக விளங்குகிருன்.

குறிப்பு:- சோழன் கரிகாலன், தீக்காயத்தால் கால்கருகி அப்பெயரைப் பெற்ருன். பின்னர் பெருமைமிக்க அரசனுக அரசாண்டான் என்று தமிழக வரலாறு கூறுகிறது. கன்னிங்காமும் கால் கருகி சிறந்த வீரனுக மாறியதால் கலங்காத கரிகாலன் என்று இங்கே அழைக்கப்பட்டிருக்கிருன்.

# 3. கண்டேன் கொண்டேன்!

உலகெங்கும் ஒரு மகிழ்ச்சியான செய்தி உலா வந்து கொண்டிருந்த நேரம் அது. 1503 ஆண்டுகள் அழிந்து மறைந்துபோயிருந்த ஒலிம்பிக் பந்தயம் புதிய பிறப்பெடுத்து பெருநடை போட இருக்கிறது என்ற செய்திதான், சிந்தை இனிக்கும் சேதியாகப் பரவி நின்றது.சுவையான அந்த சேதி, விளையாட்டு ரசிகர்களுக்கு சுகமானசேதியாகவும் விளங்கியது.

பழைய ஒலிம்பிக் பந்தயங்களை பார் புகழ நடத்தி வந்த கிரேக்க நாட்டிலே தான், புதிய ஒலிம்பிக் பந்தயங்களும் நடத்தப்படவேண்டும் என்று கிரேக்கர்கள் பிடித்த பிடிவாதம் வெற்றி பெற்றது. புதிய ஒலிம்பிக் பந்தயத்தின் தந்தை என்று புகழ்ப்பெற்ற பிரெஞ்சு நாட்டுத் திருமகன் பியரி கூபர்டின் பிரபுவும் சம்மதம் அளித்து விட்டார்.

1896ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ந் தேதி, கிரேக்க நாட்டில் உள்ள ஏதென்ஸ் நகரத்தில் அமைந்திருந்த வெள்ளைக் கல்லாலான விளையாட்டரங்கத்தில், முதலாவது ஒலிம்பிக் பந்தயங்கள் தொடங்கின. 50,000 விளையாட்டு ரசிகர்கள் கூடியிருந்து விளையாட்டுக்களை ஆவலுடன் எதிர்பார்த்து அமர்ந்திருந்தார்கள். முப்பத்தி நான்கு நாடுகள் ஆதரவு தந்து, போட்டிகளில் கலந்து கொள்கிறோம் என்று வாக்கு

கொடுத்திருந்த போதும், வந்து கலந்து கொண்ட நாடுகள் 13 தான்.

போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்ச்சிகள் 12. ஓட்டப்பந்தயங்கள், எறியும் நிகழ்ச்சிகள், தாண்டும் போட்டிகள் என்று 12 நிகழ்ச்சிகளில் போட்டிகள் நடத்துவதாக முடிவாகி இருந்தன. இவற்றிலே போட்டியிடுவதற்காக அமெரிக்காவிலிருந்தும் ஒரு வீரர் குழு வந்திருந்தது. அவர்களை அமெரிக்க நாடு அனுப்பி வைக்கவில்லை. ஏனெனில், அப்பொழுது அதிகார பூர்வமான ஒலிம்பிக் பந்தயக் குழுவானது அங்கே நிறுவப்படாமல் இருந்ததே காரணம்.

விளையாட்டுக்களில் ஆர்வமுள்ள இளைஞர்கள் ஒரு சிலர் சேர்ந்து கொண்டு, எப்படியும் ஏதென்ஸ் நகரம் சென்றுவிட வேண்டும் என்று முடிவு செய்தனர். பண வசதியும் அதே நேரத்தில் விளையாட்டு வீரராகவும் விளங்கிய ராபர்ட் கேரட் (Robert S. Garrett), மற்றும் பல வீரர்களை சேர்த்துக் கொண்டான். ஒரு சில வீரர்களுக்கு பண உதவியும் செய்து, 10 வீரர்கள் அடங்கிய குழுவாக ஏதென்ஸ் நகரத்தை அடைந்தார்கள்.

முதல்நாள் நடந்த முதல் போட்டி மும்முறைத்தாண்டும் போட்டி (Hop Step & Jump) எனும் போட்டியாகும். அதில் அமெரிக்காவைச் சேர்ந்த ஜேம்ஸ் கன்னோலி வெற்றி பெற்று, முதன்முதலாக தங்கப்பதக்கத்தை, கிரேக்க நாட்டு மன்னர் முதலாம் ஜார்ஜிடம் பரிசாகப் பெற்று, அழியாப் பெரும் புகழை அடைந்தான்.

அடுத்தடுத்து நடந்த போட்டிகளில் அமெரிக்க வீரர்களின் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது. ராபர்ட்டின் முக்கிய போட்டி நிகழ்ச்சி இரும்புக்குண்டு (Shot Put) எறிவதாகும். ஆனால் ராபர்ட்டுக்கு தட்டெறியும் போட்டியிலும் (Discus) கலந்து கொள்ள வேண்டும் என்று ஆசை. ஆனால் தட்டு எந்த அளவு இருக்கும், என்ன கனம் இருக்கும் என்று கண்டதேயில்லை. செவிவழிச் செய்தி தான். இப்படித்தான் இருக்கும், இருக்கலாம் என்பதாக கற்பனை செய்து கொண்டு, ஒரு நண்ப

னிடம் எறியும் தட்டு (Disc) ஒன்று செய்து தா என்று கேட்டதற்கு, அவனும் கற்பனை செய்து கொண்டு ஒரு இரும்புத் தட்டை செய்து கொடுத்தான். அந்த இரும்புத் தட்டின் எடை 20 பவுண்டாகும்.

ஆசையுடன் பெற்றுக்கொண்ட அந்த இரும்புத்தட்டை சிரமப்பட்டுத் தூக்கியெறிந்து, எந்த முறையும் தெரியாமல் பழகிக்கொண்டிருந்தான் ராபர்ட். ஏதென்ஸ் நகரில், ஒலிம்பிக் பந்தயத்தில் இரும்புக்குண்டு எறியும் போட்டியில் வெற்றி பெற்று, தங்கப்பதக்கம் அடைந்தபிறகும் கூட, ராபர்ட்டுக்குத் தட்டெறியும் போட்டியிலும் கலந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை நீங்கவே இல்லை.

ஒலிம்பிக் பந்தயத்தில் தட்டெறியும் போட்டியே மிகவும் கவர்ச்சிகரமான ஒன்றாகும். கிரேக்கர்கள் தட்டெறியும் வீரனையே சிறந்த வீரனாக மதிப்பார்கள். 'தட்டெறியும் போட்டியில் கிரேக்கர்களே வெற்றி பெறுவார்கள், அவர்களால்தான் முடியும், அவர்களை வெல்ல யாராலும் முடியாது' என்ற நினைப்பு உண்டு. கர்வமும் திமிரும் இருந்தது.

எல்லா போட்டிகளிலும் அமெரிக்கர்களே வெற்றி பெற்றிருந்தனர். அதாவது 12 போட்டிகளில் 8 போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தனர். தட்டெறியும் போட்டி நடைபெற இருந்தபோது, கிரேக்க நாட்டு வீரன் பானகியாடிஸ் பாரஸ் கிவோா போலஸ் என்பவனே வெற்றி பெறுவான் என்று கிரேக்க நாடே நம்பியிருந்தது.

அவன் மைதானத்திற்குள் நுழைந்தவுடன் மைதானமே வரவேற்பது போல பெரும் சத்தம் பீறிட்டுக் கிளம்பியது. அந்த ஆரவார வரவேற்பில், அவன் எறிந்த தூரம் 94 அடி $\frac{2}{3}$ அங்குலம். இனிமேல், இதற்குமேல் யாராலும் எறிய முடியாது என்று அகங்கார இறுமாப்பில், பானகியாடிஸ் புறப்பட்டு விட்டான்.

அமெரிக்க வீரன் ராபர்ட், தட்டெறியும் போட்டியில் கலந்துகொள்ள வந்து, இரும்புத்தட்டைத் தூக்கிப் பார்த்த பொழுது 5 பவுண்டுகளுக்கும் குறைவாக இருந்ததைக்கண்டு, ஆச்சரியமடைந்து போனான். எடையோ குறைவு. எறியும் முறையை அப்பொழுதுதான் பார்க்கிறான்.

ஆகவே, தனக்குத் தெரிந்த முறையில், பிறர் பார்த்து சிரிக்கும் முறையில், தட்டைக் கையில் வைத்து சுற்றிச்சுழற்றி எறிந்த போது, அந்தத் தட்டுப்போய் விழுந்த தூரம் 95 அடி 7½ அங்குலமாகும். தட்டெறியும் போட்டியிலே கிரேக்கர்களே கீர்த்தியுடன் திகழ்வார்கள் என்ற எண்ணம், மண்ணாய் போனது கண்டு, கிரேக்கர்கள் கலங்கிப் போய்விட்டனர். இதுவரை ஒரு போட்டியிலும் வெல்லவில்லையே, இதிலும் தோற்றுப் போனோமே என்ற வேதனையில் வீழ்ந்து துடித்தனர்.

வெற்றி வீரன் போல் வெளியே சென்ற பானகியாடிசுக்கு அந்த அதிர்ச்சியைத் தாங்கமுடியவில்லை. இரண்டாவது இடத்தையே அடைந்தான். ஆனால் அது ராபர்ட்டுக்கும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஏதென்ஸ் நகரத்தில்தான் இந்த இரும்புத் தட்டைக் கண்டேன். வெற்றி கொண்டேன். என்று இரண்டு தங்கப்பதக்கங்களை வைத்துக்கொண்டு மகிழ்ச்சியின் சிகரமாக நின்றான் ராபர்ட்.

பெரும் பணக்காரன் என்பதால் மட்டும் ராபர்ட் திருப்தி அடைந்துவிடவில்லை. விளையாட்டு வீரன் என்பதிலேயே பெருமை கொண்டிருந்தான். தனது பணச் செலவிலேயே அமெரிக்க பிரதிநிதியாகப் போய், முன்பின் தெரியாத இரும்புத்தட்டு எறியும் போட்டியில் வெற்றிக்கண்டது கண்டு உலகமே புகழ்ந்து போற்றியது. 20 பவுண்டு எடையுள்ள இரும்புத் தட்டை எறிந்து பழகிய அவ்வீரனின் மனத்திண்மை, இடைவிடா முயற்சி, விளையாட்டின் மேல் இருந்த பற்று இவைகளைப் பார்க்கும்பொழுது, நாமும் உண்மையுடன் முயற்சி செய்தால், வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை பிறக்கிறதல்லவா!

# 4. வெற்றி பெறும்வரை விடமாட்டேன்!

அமெரிக்க நாட்டின் அழகு நகரமான நியூயார்க் நகரை விட மக்கள் தொகை குறைவான நாடு ஒன்று. பின்லாந்து என்பது அதன் பெயர். அவ்வளவு சிறிய நாட்டிலிருந்து, பத்துக்கும் குறைந்த வீரர்களை 1912ம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயத்திற்கு அனுப்பி, 6 தங்கப்பதக்கங்களை வென்று புகழ் பெற்றது அந்த நாடு என்றால், ஆச்சரியமாக மட்டுமல்ல, அது ஓர் அதிசயமான சாதனைதான்.

அதிலும் அந்த 6 தங்கப் பதக்கங்களில் 3 தங்கப்பதக்கங்களை வென்று தந்த வீரர் ஒருவர் இருந்தார். பெயர் ஹேன்ஸ் கோலிமெய்னன். ஆறடி அங்குல உயரமுள்ள அந்த வீரர், 5000,10,000 மீட்டர் மற்றும் நெடுந்தூர ஓட்டம் (Cross Country) இவற்றில் பெற்ற வெற்றியும் புகழும் உலகை மட்டும் உலுக்கிவிடவில்லை. அவரது நாட்டிலுள்ள இளைஞர்களிடையிலும் உணர்ச்சிக் கனலை, புரட்சித் தீயை பெருமளவில் மூட்டிவிட்டது.

அத்தகைய சூழ்நிலையில் உணர்ச்சிப்பிழம்பாகி உறுதியுடன் முன்வந்தான் ஒரு சிறுவன். உலகப்புகழ் பெற்ற ஹேன்ஸ் போல நானும் ஓடி உலகப்புகழ் பெறுவேன் என்று வீர முழக்கமிட்டான். சபதம் செய்தான் தனக்குள்ளேதான், அப்படித்தான். ஆனால் உலகப் புகழ் பெறுவது என்பது எளிதா என்ன?

சபதம் எடுத்துக்கொண்டு, சவாலை மேற்கொண்டு விட்ட அந்த சிறுவன், சகல வசதி படைத்த குடும்பத்தில் தோன்றியவனா அல்லது பதவி பலமும் அதிகார தோரணையும் நிறைந்தவர்கள் ஆதரவுடன் வாழ்ந்து கொண்டிருந்தவனா என்றால், எதுவுமே இல்லை.

எபோ (Abo) எனும் சிறு நகரத்தில் பிறந்தவன். வறுமைச்சூழ்நிலையில் வாழ்ந்தவன். தனது 12ம் வயதிலே தந்தையை இழந்தவன். விதவைத் தாயின் நிழலிலே வாழ நேர்ந்ததால், பள்ளிப்படிப்பைத் தொடர முடியாமல், வேலைக்குச் சென்று சம்பாதித்து வாழ வேண்டிய கட்டாய நிலைக்கு ஆளானான்.

வயிற்றுப் பிழைப்பு என்று வேலைக்குப் போய்விட்டால், விளையாட ஏது நேரம்? இந்த நிலையில்தான், ஓடி வெற்றி பெற்று, உலகப் புகழ் பெறுவேன் என்று லட்சியத்தை எடுத்துக்கொண்டான் அந்த சிறுவன்.

15ம் வயதில் அவன் எடுத்துக்கொண்ட லட்சியத்திற்குப் பக்கபலம் என்று யாருமில்லை. பாரதக் கதையில், வில்வித்தை கற்றுக்கொள்ள விரும்பிய ஏகலைவன், துரோணரை நினைத்துக்கொண்டே கற்றுக்கொண்டதுபோல, அந்த சிறுவனும், தன் நாட்டு வீரனை ஹென்சை நினைத்துத் தொடர்ந்தவாறே தன் லட்சியத்தைத் தொடங்கினான். தொடர்ந்தான்.

லட்சியம் பெரிது என்பதால், கடினமான உழைப்பு வேண்டாமா! கடினமான உழைப்பையும் கடினமான பயிற்சியுடன் கட்டுப்பாடாக செய்யத் தொடங்கினான். தானே தன்னை கட்டுப்படுத்திகொண்டு,பயிற்சியைத்தொடங்கினான்.

பந்தயத்திற்கு முதலில் தேவை உடலில் நெஞ்சுரம் (Stamina) என்பதால் மேற்கூண்டு இல்லாத பாரவண்டிகள் ஓடும்போது (Trolley), அவற்றைப் பிடித்துக் கொண்டே முதலில் ஓடத் தொடங்கினான். எத்தனை மைல் தூரம் என்று இவன் கணக்கிட்டுக் கொள்ளவில்லை. எவ்வளவு தூரம் தன்னால் முடியுமோ, அவ்வளவு நேரம் ஓடினான். முகத்தைக்

கடுமையாக்கிக் கொண்டுமல்ல, மனத்தைக் கல்லாக்கிக் கொண்டும் ஓடினான்.

ஓடத் தொடங்கினால் நிறுத்தமுடியாது என்பது போல ஓடிப் பழகிக் கொண்டேயிருந்தான். 1912ம் ஆண்டில் தொடங்கி 1916ம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொள்ளத் தயாராக இருந்தான். ஆனால் விதி அவனுக்கு வேறு விதமாக விளையாட்டிக் காட்டியது. முதல் உலகப் போரின் காரணமாக ஒலிம்பிக் பந்தயம் நடைபெறாமல் போயிற்று. பத்தொன்பது வயது இளைஞனை அவன் முயற்சியும் லட்சியமும் பாழ்பட்டுப் போனதுபோல தொடக்கத் நிலேயே நின்று விட்டது, இன்னும் நான்கு ஆண்டுகள் அவன் காத்திருக்க வேண்டுமே!

வீர இளைஞன் மனத்தைத் தளர விடவில்லை. ஒலிம்பிக் பந்தயத்தில் வெற்றி பெறும்வரை விடமாட்டேன் என்று வீராவேசத்துடன் கூறினான். மீண்டும் ஓட்டப்பயிற்சியைத் தொடர்ந்தான். இளமையின் எழுச்சியிலே நின்றவனுக்கு 23 வயது ஆகின்ற போது 1920ம் ஆண்டு ஆண்ட்வெர்ப் எனும் இடத்தில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்திற்குச்சென்றான்.

முதல் போட்டி 5000 மீட்டர், அதில் முதலில் வர முடியாமல் தோற்று இரண்டாம் இடத்தையே அடைந்தான். அது பெரிய ஏமாற்றமாக அமைந்தது. முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பார்களே அதுபோல அந்தத் தோல்வியை கெட்ட சகுனமாக அவ்வீரன் எடுத்துக் கொள்ளவில்லை. அடுத்து நடக்கும் 10,000 மீட்டர் போட்டியில் வெற்றியே பெறுவேன் என்று அஞ்சா நெஞ்சுடன் அயரா உறுதியுடன் ஓடி வெற்றிபெற்றான். அந்த முதல் தோல்வியே அவனுக்கு கடைசித் தோல்வியாகிவிட்டது.

அதாவது அவனது எட்டு ஆண்டுகள் ஒலிம்பிக் பந்தயப் போட்டியில் தோற்றது அதுவே முதலும் கடைசியுமாகும்.

நிமிர்ந்தவாறு ஓடுகின்ற ஓட்ட அமைப்பு, ஓட்டம் தொடங்கிவிட்டால் ஆரம்பம்போலவே கடைசிவரை

ஓடுகின்ற வேகம். கையிலே நிறுத்துக் கடிகாரத்தைக் (Stop-watch) கட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டே நேரத்திற்கு ஏற்றவாறு வேகமாக ஓடிவரும் பண்பு ஒவ்வொரு வட்டத்தையும் தூரத்தையும் இவ்வளவு நேரத்திற்குள் ஓடியாக வேண்டும் என்ற கணிப்பு. ஓட்டக்காரர்களைப் பற்றியே கவலைப்படாமல் தன் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே ஓடிய அந்த இளைஞன் முதலாவதாக கலந்து கொண்ட ஒலிம்பிக் பந்தயத்தில் 2 தங்கப்பதக்கங்களும் 1 வெள்ளிப் பதக்கம் பெற்றதுடன் அல்லாமல் பந்தயத்தில் சாதனை செய்த வீரன் என்ற புகழையும் பெற்றான்.

அதேபோல் 1924ம் ஆண்டு நடந்த பந்தயத்திற்கு வந்து, நான்கு தங்கப்பதக்கங்களை வென்றான் அந்த வீரன். யாரைப் போல் தான் புகழ்பெற வேண்டும். என்று விரும்பினானோ. அந்த வீரனே வந்து போற்றித்தழுவி பாராட்டி புகழ்கின்ற வகையில் ஒலிம்பிக் சாதனைகளையும் உலக சாதனைகளையும் பொறித்தான் அந்த மாவீரன். பறக்கும்பின்லாந்து வீரன் என்று புகழ்பெற்ற அவ்வீரனின் பெயர் பாவோ நர்மி(Paavo Nurmi) என்பதாகும்.

எட்டு ஆண்டுகள் அதாவது 1920, 1924 1928ம் ஆண்டுகளில் பந்தயங்களில் கலந்து கொண்டு 9 தங்கப்பதக்கங்களையும் 3 வெள்ளிப்பதக்கங்களையும் வென்ற வீரன் பாவோநர்மி போல இதுவரை எந்த வீரனும் இல்லை என்ற அழியாப்புகழ் பெற்றான்.

வறுமையை வென்றான். குடும்பத்தில் வந்த துயரங்களை வென்றான். லட்சியமே துணை என்ற சத்திய சோதனையில் வென்றான். தன்னைக்கட்டுப்படுத்தினால் தலைமைப் பேறடையலாம் என்ற சொல்லுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தான். தானே தனக்கு தலைவனும் பகைவனும் என்பார்களே அது போல பாவோநர்மி கொண்ட கொள்கையில் குன்றாக நின்றான். குவலயத்தில் அழியாப் புகழைக்கொண்டான்.

# 5. தணியாத தாகம்

"ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டாள். இனி உலக அரங்கில் நடக்கும் ஓடுகளப் போட்டிகளில் அவளால் கலந்து கொள்ள முடியாது. முன்போலத் தாண்டவும் முடியாது. வெற்றி பெறவும் முடியாது" என்று விளையாட்டு வல்லுநர்களும் சரி, மற்ற போட்டியாளர்களும் முடிவு கட்டிக் கொண்டிருந்த நேரத்தில், முகில் விட்டுத் தோன்றிய முழு நிலவென, இருந்த குகைவிட்டுக் கிளம்பிய பெண் புலியென வந்து நின்றாள் அந்த வீராங்கனை.

16வயதில் 6மீட்டர் 12 செ.மீ. நீளம் ($20' \frac{1}{2}''$) தாண்டிக் கொண்டிருந்த அவள் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே நடந்த போட்டிகளில் நீளத் தாண்டும் போட்டியில் வெற்றிமேல் வெற்றி பெற்று வந்த நிலை அப்பொழுது. நீளத் தாண்டும் போட்டியில் உலக சாதனையை நிகழ்த்தும் ஆற்றல் பெற்றிருப்பவள் (Long Jump) என்று கணக்கிடப்பட்டிருந்த நிலையில், திருமணமும் ஆகி, தாயாகும் தகுதியும் பெற்றுவிட்ட பொழுதுதான், மேற்கூறியவாறுபேசிக்கொண்டிருந்தார்கள்.

தாய்மைப் பேற்றினை அடைந்திருந்த காலத்திலும், தாயாகிவிட்ட நிலையிலும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த

அந்த மங்கை, தன் மகனுக்கு 6 மாத காலம் ஆனவுடன், தொட்டு விட்ட இடத்திலிருந்து தொடங்கி விட்டாள் தன் பணியை. அவளது ஆர்வம் தணியாத தாகமாகவே இருந்தது. ஆமாம்! உலக சாதனையை நிலைநாட்ட வேண்டுமென்ற உத்வேகத்தில் எழுந்த தாகம் தான் அது.

தாயாகிவிட்டால் தேகம் தளர்ந்து போய்விடும், மனமும் மயங்கி விழுந்துபடும் என்ற வார்த்தைகளைப் பொய்யாக்கும் வண்ணம் அமைந்திருந்தது அவ்வீரமங்கையின் பயிற்சியும் முயற்சியும். 1969 ஆம் ஆண்டில் 16 வயது நிரம்பிய அவ்விள நங்கை தாண்டிய தூரம் 6 மீட்டர் 12 செ. மீ. என்றால், தனது 23ஆம் வயதில் அதுவும் ஒரு குழந்தைக்குத் தாயான பிறகுத் தாண்டிக் குதித்த தூரம் 6 மீட்டர் 5. செ.மீ. (21'5'') ஆகும். தாண்டும் தூரத்தை அதிகமாக்கிக் கொண்டிருந்த ஆற்றலைக் கண்டு, அவளே மான்டிரியலில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் நீளத்தாண்டும் போட்டியில் வெற்றிபெறுவாள் என்ற நம்பிக்கையைப் பாழாக்கிடும் வண்ணம் ஒரு ஊறு அவளுக்கு நடந்து விட்டது.

அவளது காலில் ஏற்பட்ட காயம், அவளைத் தாண்ட முடியாத நிலைக்கு ஆளாக்கி விட்டது. ஒலிம்பிக் பந்தயத்தின் ஆசையும் அது கூடவே அடங்கி ஒடுங்கிப்போய் விட்டது. என்றாலும், அவளது ஆர்வமும், வெற்றித் தாகமும் அடங்கிப் போய் விடவில்லை. தணிந்து போகவும் இல்லை. மாறாக, அணையை மீறிக் கிளம்பிய புதுவெள்ளம் என அலைபாய்ந்து சென்றது.

பல ஆராய்ச்சி வல்லுநர்கள், அந்த மங்கையால் இனி தாண்டவே முடியாது என்று ஆரூடம் கூறி விட்ட வேளையிலும், மனம் தளராமல் தன் காலை சரிப்படுத்தும் காரியங்களில் கண்ணூன்றி விட்டாள். காலை சரிப்படுத்தும் பயிற்சியில் இடைவிடாது முயன்றாள். முழு மூச்சுடன் முயன்றாள். சரியாக்கியே தீருவேன் என்று விடாமுயற்சியுடன், விடாப் பிடியுடன் பயிற்சிகளைச் செய்தாள். 'முயற்சியுடையோர்க்

ருந் தெய்வமே முன்வந்து துணை நிற்கும், என்பார்களே அதுபோல, அந்த மங்கையின் நினைவு நிஜமாகி விட்டது.

ஆமாம்! மீண்டும் நீளத் தாண்டும் போட்டியில் கலந்து கொள்ளும் அளவுக்குத் தேறிவிட்டாள். தேற்றிவிட்டாள். ரஷ்ய நாட்டில் தேசிய அளவில் நடக்கும் போட்டியில் பங்கு பெற்று, அவள் வெற்றி பெற்று ஏற்படுத்திய சாதனையின் தூரம் 6மீ. 82 செமீ. (22' 5½") ஆகும். 1978ஆம் ஆண்டு நிகழ்த்திய அவளது சாதனையானது உலகத்திலே உள்ள நீளத் தாண்டும் போட்டியில் நிகரற்று விளங்கிய வீராங்கனை களுக்குள் பத்தில் ஒருவராக உயர்த்திவிட்டிருந்தது.

'இந்த நிலைக்கு வந்துவிட்டோம். இதுவே போதும்' என்று எண்ணி அமைதி அடைந்துவிடவில்லை. இறுமாந்து போகவும் இல்லை. 'பத்தில் ஒருவராக இருப்பதா? அதற் குப் பதிலாக, 'இவள் ஒருத்தி தான்' என்று முதற்படியில் நிற்க வேண்டாமா? என்ற எண்ணமே அவளை வேகப்படுத் தியது. மனதிலே எழுச்சியை ஏற்படுத்தியது. தொடர்ந்து தன் பயிற்சியைச் செய்தாள்.

அடுத்து வரும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே நடக்கும் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றுவிட வேண்டும் என்று துணியாத முயற்சியில் உழைத்து, ஒரு மனதுடன் பயிற்சி செய்து, உற்சாகத்துடன் பங்குபெறச் சென்ற வேளையில் தான், 'உண்மையான உழைப்பானது எவ்வாறு ஒருவரை உலகத்தில் உயர்த்திக் காட்டும்' என்ற உண்மையை அவள் உணர்ந்தாள். உலகமும் உணர்ந்து கொண்டது.

சற்றுதூரம் அதிகமாகத் தாண்டலாம் என்ற நினைவுடன் தாண்டியபோது, அவள் தாண்டி முடித்த தூரத்தை அளந்த வுடன் அவளாலே நம்ப முடியவில்லை. மற்றவர்கள் நிலையும் அப்படித்தான் இருந்தது. 7 மீட்டர் 0·7 செ.மீ. (23.'3") தாண்டி உலக சாதனையையே நிகழ்த்தி விட்டாள். அது மட்டுமல்ல. 7 மீ தூரத்தை முதலில் தாண்டிய வீராங்கனை

(23அடி) என்ற சிறப்புப் பட்டத்தையும் பெற்றுவிட்டாள்.

அவரது பயிற்சியாளர் ஐகர் டெர்ஒவனேஷ்யன் என்பவர் கூறும்பொழுது, '100 மீட்டர் தூரத்தை 11·5விஞடிகளில் ஓடி முடிக்கின்ற ஆற்றல் உடைய இந்த மங்கை, வருகிற மாஸ்கோ ஒலிம்பிக் பந்தயத்தில் 7·5 மீ. (24·8") தூரம் கூட தாண்ட முடியும் என்று நம்புகிறேன்' என்று நம்பிக்கைத் தெரிவிக்கிருர்.

ரஷ்ய நாட்டிலுள்ள லித்தானியா எனும் பகுதியில் ஒரு விவசாயியின் மகளாகத் தோன்றி மாபெரும் சாதனை புரிந்த அந்த மங்கையின் பெயர் வில்மா பார்டாஸ்கின் ((Vilma Bardaaskiene) என்பதாகும்.

தாய்மையும், காலில் துன்பமும் வந்த பொழுதும் கலங்கிப் போகாமல், உலக சாதனை நிகழ்த்திப் பெரும் புகழ் பெறவேண்டும் என்று உற்சாகமாக உழைத்து உயர்ந்த வில்மா, நமக்கெல்லாம் நம்பிக்கை நட்சத்திரமாக அல்லவா ஒளிர்ந்து கொண்டிருக்கிருள். நட்சத்திரத்தைப் பார்க்கின்ற பொழுதெல்லாம், நாமும் அப்படி வரவேண்டும் என்ற ஓர் எண்ணம் தோன்றியும், அதன்படி நாமும் நடந்து விட்டால், நம் நாட்டு இளைஞர்களிடையே இப்படி ஓர் அற்புதம் நிகழ்ந்து விட்டால், நமக்கெல்லாம் பெருமை தானே! அந்த நாளை விரைவில் எதிர்பார்ப்போம்!

# 6. கெடுத்தாலும் கெடமாட்டேன்!

ஏழைக் குடும்பம் ஒன்றில் ஏழு குழந்தைகளில் ஒருவ(ன)ாகத் தோன்றிய ஜெசி ஓவன்ஸ் எனும் வீரனை, 'இவனைப் போல் யாரும் பிறக்கப் போவதில்லை' என்று எல்லோரும் அதாவது எதிர்த்தவர்கள் உட்பட ஏற்றுப் போற்றிப் பாராட்டினார்கள் என்றால், உலகவீரர்களுக்கிடையே உன்னத இடத்தை வகித்துத் துருவ நட்சத்திரம் போலத் திகழ்கின்றான் என்றால், அது குருட்டு அதிர்ஷ்டத்தால் அவனுக்கு வந்த புகழ் அல்ல! உண்மையான உழைப்பின் உரிமை நிறைந்த வெற்றி தந்த பெரும் புகழாகும்.

பிறந்த ஊரான அலபாமா எனும் இடத்தில் வாழ வழியில்லாத காரணத்தால், அமெரிக்க நாட்டின் ஒகியோ எனும் மாகாணத்தில் உள்ள இடத்திற்கு வேலைதேடிப்போன தந்தையுடன், ஓவன்சும் வந்து சேர்ந்தான். ஒன்பதாவது வயதில் ஊர் மாறி வந்தாலும், உடன் தொடர்ந்த வறுமையும் வாட்டமும் அவனது குடும்பத்தை விட்டபாடில்லை. அவர்களும் வறுமையை விரட்டியபாடில்லை.

'கற்கை நன்றே....பிச்சைப் புகினும் கற்கை நன்றே'என்று அவ்வை பாடினாள். அவ்வுரையானது அமெரிக்காவிலும் பொருந்தியிருக்கிறது பாருங்களேன். வறுமையில்

வாடினாலும் வளர்கின்ற அறிவுக்கு வடிவம் தந்திடும் பள்ளி நோக்கிப் போனான் அவன்.

பிறந்ததோ நீக்ரோ குடும்பம். பரம்பரை சொத்து போல வறுமை. 'கொடிது கொடிது வறுமை கொடிது. அதனினும் கொடிது இளமையில் வறுமை' என்பார்களே, அந்த நிலையில் சிறுவன் பள்ளிக்குப் போனான். மிகவும் வெட்கப்படுபவனாக, தாழ்வு மனப்பான்மையுள்ளவனாக, எலும்புந் தோலுமாகக் காட்சியளிப்பவனாக அவன் இருப்பதைக் கண்டு ஆசிரியர்களும் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் அனுதாப மிகுதியால் அதிகமாக அன்பு காட்டத் தொடங்கினார். 'இவனது தாழ்வு மனப்பான்மையை அகற்ற, தன்னம்பிக்கையை ஊட்ட, உடலும் தேற ஒரே வழி, 'இவனை விளையாட்டுக்களில் சேர்த்துவிடுவதுதான் என்பதே, அந்த ஆசிரியரின் அருமையான திட்டமாக அமைந்தது. உடல் நலம் பெற அவனை அழைத்து வந்து விளையாட்டிலும் ஈடுபடுத்தி விட்டார்.

வறுமை வதைக்கும் பொழுது விளையாட்டில் விருப்பமா கொப்பளிக்கும்? என்றாலும், கூட்டத்துடன் கூட்டமாக, பையன்களுடன் பையனாக, ஓவன்ஸ் ஓடி விளையாடினான். உற்சாகம் பெற்றான். அவனை அறியாமல் உடல் உறுதி பெற்றுக்கொண்டு வந்ததை அவனும் அறியவில்லை. அவனது ஆசிரியரும் அறியவில்லை.

ஒரு நாள், ஓடு களப்போட்டி நிகழ்ச்சிகளைக் கற்பிக்கும் பயிற்சியாளர் ஒருவர் (Track Coach) ஓவன்சை அழைத்து, 100 கெஜ தூரம் ஓடி வா என்று கட்டளையிட்டு விட்டு, ஓடி முடிக்கின்ற இடத்தில்வந்து நிறுத்துக் கடிகாரத்துடன் (Stop Watch) நின்று கொண்டார். ஆணையைமேற்கொண்ட இவன் ஓடி முடித்த நேரத்தைப் பார்த்த பயிற்சியாளர் அயர்ந்தே போய்விட்டார்.

'இந்தக் கடிகாரம் பழுதடைந்து போய்விட்டது. இதை ரிப்பேர் செய்திட வேண்டும்' என்று அவர் முடிவு செய்தார்.

காரணம் என்னவென்றால், ஓவன்ஸ் ஓடி முடித்த 100 கெஜ தூரத்தின் நேரம் உலக சாதனையை நெருங்கிக் கொண்டிருந்தது. அவரது ஆர்வம் ஆவேசமாக விரட்டவே, கடிகாரம் ரிப்பேர் கடையை நோக்கி ஓடினார். கடைக்காரர் சொல்லிய சேதி, அவரை மேலும் வியப்புக் குள்ளாக்கி, அதிர்ச்சி யடையச் செய்தது.

அதாவது கடிகாரம் சரியாகவே இருக்கிறது. பழுதடைய வில்லை என்பதே! இந்தச்சேதி எல்லோரிடையிலும் பரவி யது. இணையிலாத இளைஞன் ஒருவன் நம்மிடையே இருக் கின்றான் என்ற இன்பத்தில், ஓவன்ஸை எல்லோரும் பாராட் டினார்கள். தைரியமூட்டினார்கள். வாடியபயிருக்கு வான்மழை கிடைத்தது போன்ற புகழ்ச்சி சூழ்நிலை, ஓவன்ஸ் வாழ்வில் அமைந்தது.

பள்ளியில் நடக்கும் போட்டிகளில் எல்லாம் முதல்வனாக வந்தான். பிறகு கல்லூரியில், ஓகியோ பல்கலைக் கழகத்தில் நடந்த போட்டிகளில் எல்லாம் வெற்றி வீரனாகத் திகழ்ந் தான். அத்துடன் அல்லாமல், ஒல்லியாக, உபயோகமற்றவன் போல நடமாடிய சிறுவன், இப்பொழுது ஓகியோ பல்கலைக் கழகத்திற்கும் மாகாணத்திற்கும் பிரதிநிதியாகப் போட்டி களில் பங்கு பெறுபவனாகவும் மாறிவிட்டான். உழைப்பின் சின்னம் அல்லவா அவன்!

வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்து வீரநடை போட் டாலும், ஓவன்ஸ் வாழ்க்கையில் வறுமை விடாமல் விரட்டிக் கொண்டு தான் இருந்தது. கல்லூரி படிப்புக்கு அதாவது மேல் படிப்புக்கு எந்த விதமான உபகாரச் சம்பளமோ அல்லது ஆதரவோ கிடைக்காத நிலையிலும், கல்லூரிப் படிப் பைத் தொடர்ந்தான் அந்த இளைஞன். அதாவது வேலை செய்து கொண்டே படிப்பைத் தொடர்வது தான். எவ்வளவுதான் விளையாட்டுக்களில் ஈடுபட்டு சிறப்புற விளங் கினாலும் படிப்பை விடாமல் கெட்டிக்காரனாகத் திகழ வேண்டும். என்று அவனது பயிற்சியாளர் லாரிஸ்னிடர்

என்பவர் அடிக்கடி கூறிவந்த அறிவுரையை ஓவன்ஸ் ஒரு சிறிதும் மீறாமலே வாழ்ந்து வந்தான்.

அந்த நிலையில் தான் இரவு நேரங்களில் வேலை செய்தும் பகலில் படித்தும், காலை மாலை நேரங்களில், ஓட்டப் பயிற்சிகள் செய்தும் ஓவன்ஸ் வாழ்ந்து வந்தான். அவன் செய்த வேலையோ லிப்ட் இயக்கும் அலுவலராக. அதாவது மாலை 5 மணிக்குத் தொடங்கி, இரவு 12-30 மணி வரைதொடரும். அதற்குப் பின் உறங்கி, விடியற்காலையில் விளையாட்டு மைதானத்திற்கு வந்துவிடுவான் ஓவன்ஸ்.

அவ்வாறு பயிற்சி செய்துவரும் நாளில், ஆன் ஆர்பர் (Ann arbor) என்னுமிடத்தில், நடக்கின்ற ஓட்டப்போட்டி களில் கலந்துகொள்ள வேண்டுமென்று ஓவன்ஸ் பயிற்சி யாளர் கூறியிருந்தார். அதற்கான ஆயத்தம் செய்து கொண் டிருக்கும் வேளையில் ஒரு நாள் இரவு, அந்த அலங்கோல மான அதிர்ச்சி தரும் நிகழ்ச்சி ஒன்று நடந்துவிட்டது.

இரவு 12-30 மணி. இளைப்பும் களைப்பும் மேலோங்கி இருக்கும்போது, படுத்து உறங்கிட வேண்டும் என்று படுக்கச் சென்றால், படுக்கையிலே பாம்பு ஒன்று கிடந்தது. எப்படி இருக்கும்? பயத்தால் குழம்பிப்போய், என்ன செய்வது என்று புரியாமல் திகைத்தான் அந்த இளைஞன்.

அச்சம் ஆட்டுவித்த போதிலும், அறிவு வேலை செய்யத் தொடங்கிவிட்டது. எச்சரிக்கையுடன் அருகே சென்று பார்த்தபொழுது அது செத்த பாம்பு என்று தெரியவந்தது. செத்த பாம்பு தன் படுக்கைக்கு எப்படி வந்தது? சிந்தனைகள் சிதறிச்சென்று சேறுக்காக அலைந்து திரிந்தன. அதன்பின் அவனது யூகம் ஓர் உண்மையை வெளிப்படுத்தியது.

அடிக்கடி யாராவது ஒருவன் ஓவன்சை பயமுறுத்து வதற்காகவும், வேதனைப்படுத்துவதற்காகவும் இவ்வாறு ஏதாவது செய்துவருவது வழக்கம். அப்படிப்பட்டவர்கள் வேலையாகத்தான் இருக்கும் என்று முடிவு கட்டினான்.

தன்னை எப்படியும் கெடுத்து, விளையாட்டுத் துறையிலிருந்து விரட்டிவிடவேண்டும் என்று வஞ்சகமாக சூழ்ச்சி செய்து கொண்டிருப்பவர்களை அடையாளம் புரிந்துகொண்டிருந் தாலும், அடிக்கடி நடைபெறுகின்ற இது போன்ற நிகழ்ச்சி களை சகித்துக்கொள்ள முடியாதவனாகவும் இருந்தான். என்ன இருந்தாலும் 21 வயது இளைஞன்தானே! எதிர்ப் புக்களை சமாளிக்கலாம். ஆனால் எவ்வளவுதான் சமா ளிப்பது?

படுக்கையில் பாம்பைப் போட்ட பாவியை யார் என்று புரிந்துகொண்டவுடன், பதிலுக்கு பதில் ஏதாவது செய்து விடவேண்டும் என்ற வேகத்தில், காகிதப்பை ஒன்றில் தண் ணீரை நிரப்பிக்கொண்டு, அவனை அடிக்கவேண்டும் என்ற வெறியில், மாடிப்படி இறங்கி ஓடினான் ஓவன்ஸ். அடிவாங்க இருந்தவனின் அதிர்ஷ்டமோ அல்லது ஓவன்ஸின் கெட்ட நேரமோ தெரியவில்லை, தண்ணீர் சிந்தியதால் மாடிப்படி வழுக்கி, புரண்டுபோய்க் கீழே விழுந்தான் ஓவன்ஸ். யாரும் கீழே விழுந்ததைப் பார்க்கவில்லை என்றாலும் அடி எதுவும் அதிகமாக இல்லாமல் தப்பித்துக்கொண்டான். ஆனாலும், அந்த அபாயப் பிடியிலிருந்து அவனால் தப்ப முடியவில்லை.

கோபம் அடங்கி, பின் மேல் மாடிக்குச் சென்று, தன் அறைக்குள் புகுந்து உறங்கியும் விட்டான். ஒரு வாரகாலம் ஆகிவிட்டபோதும், கீழே விழுந்த அடியின் வேகம் வெளி வராமல், உள்ளுக்குள்ளேயே கிளர்ந்தெழுந்ததை ஓவன்ஸ் கவனிக்கவில்லை. உறுத்தல் அதிகமாக இல்லை போலும்.

அடுத்த வாரம் நடக்கவிருந்த போட்டிகளில் கண்ணுங் கருத்துமாக ஈடுபட்டான்: பல்கலைக்கழகப் போட்டிகளில் உயரத்தடை தாண்டும் போட்டியில் (Hurdles) பங்குபெற்ற பொழுதுதான், முதுகில் வலி இருப்பது தெரியவந்தது. அது கொஞ்சங் கொஞ்சமாக இறுகிக்கொண்டும் அவனது முதுகுப் புறத்தை இறுக்கிக்கொண்டும் வந்தது. குளித்தால் சரியாகப் போகும் என்று நினைத்துப்போய்குளித்தவுடன், அது மீண்டும்

சரியாக அழுத்திப் பிடித்துக்கொண்டது. நிமிரவும் முடிய வில்லை, குனியவும் முடியவில்லை.

ஆன் ஆர்பர் எனும் இடத்தில் நடக்கின்ற போட்டியில் வெற்றி பெற்றால் மிகவும் சிறப்புடையதாகும் என்ற தன் விருப்பத்திற்குத் தடை போடுவதுபோல உடல் நிலை அமைந்துவிட்டது. 'ஒரு வாரம்தான் இருக்கிறது. இடையில் எப்படியும் அதில் கலந்துகொண்டாக வேண்டும்' என்ற எண்ணம் மட்டும் ஓவன்சிடம் ஓயாமல் உரைத்துக் கொண்டேயிருந்தது! ஆசை இருந்தால் மட்டும்போதுமா? அதற்கு உடல் இடந்தர வேண்டாமா?

ஓவன்ஸ் பயிற்சியாளர் முதலுதவி முறைகளைச் செய்து வைத்தார். இயந்திரங்களின் உதவியால், வெப்பக்கதிர்களைப் பாய்ச்சி, வலியைப் போக்கிட முனைந்தார். மருத்துவர் செய்த முயற்சி பலனளிப்பதுபோல் தோன்றினாலும் முற்றிலும் வலியை குணமாக்கிட முடியவில்லை. முதுகில், வலி இருந்தது. நிமிர்ந்து நிற்கவும், குனியவும் முடியவில்லை. என்ற நிலைமையில் சிறிதும் மாற்றமில்லாமல், நேரம் கழிந்து கொண்டிருந்தது.

எப்படியோ, போட்டி நடக்கும் இடத்திற்கு வந்தாகி விட்டது. ஓவன்ஸ் நிலையைக் கண்ட பயிற்சியாளர் அருகில் சென்றார். உன்னால் 220 கெஜ தூரத்தைக்கூட ஓடிமுடிக்க இயலாத நிலையில் இருப்பதால் இந்தப் போட்டியிலிருந்து நீ விலகிக் கொள்கிறாய் என்று அறிவித்து விடுகிறேன் என்று கூறினார். "ஓவன்சோ பின்வாங்கும் பேச்சுக்கே இடமில்லை. திட்டமிட்டவாறு நான் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளத்தான் போகிறேன், என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டான்.

1935ம் ஆண்டு, மே மாதம் 25ந்தேதி மிகிசான் எனும் மாகாணத்தில், ஆன் ஆர்பர் எனும் இடத்திலேதான் இந்த உரையாடல், பயிற்சியாளருக்கும் ஓவன்சுக்கும்

நடைபெற்றது. 'கலந்துகொள்ளப் போகிறேன்' என்று கங்கணம் கட்டிக்கொண்டு, ஒவன்ஸ் பதமாக்கும் பயிற்சிகளைச் செய்துகொண்டு ஓடத்தொடங்கும் இடத்திற்கும் சென்றுவிட்டது,

முதுகு வலியுடன் நிற்கவும் முடியாமல், நிமிரவும் இயலாமல் திணறிக்கொண்டிருந்த வீரன் ஒவன்சிடம், அவனது பயிற்சியாளர் லேரி ஓடிவந்து, 'நீ ஓட வேண்டாம். உன்னால் முடியாது' என்று பரிந்து பேசியவுடன், இன்று நான் ஓடா விட்டால், இனிமேல் எந்த ஓட்டப் பந்தயத்திலுமே கலந்துகொள்ள மாட்டேன்' என்று பதிலளித்ததைக் கண்டு, பயிற்சியாளர் சற்றுப் பின் வாங்கி நின்று கொண்டார். ஆமாம்! ஜெசி ஒவன்சின் வலிமையான மனதின் உறுதியான சொல் அல்லவா அது! ஆகவே அவனைப் பந்தயத்தில் கலந்துகொள்ளுமாறு அனுமதியும் அளித்தார்.

முதுகு வலியும் வேதனையும், 100 மீட்டர் ஓட்டத்தில் ஓடுவதற்காக கோட்டில் வந்து நிற்கும்வரை தான் நிழலாக வந்தது. 'உங்களது இடத்திலே இருங்கள்' என்று ஓடவிடுபவரின் அதிகார ஒலி ஆரம்பித்து, துப்பாக்கிச் சுடும் ஓசை வரையிலும் வலி தெரிந்தது. அதன் பின் ஒவன்ஸ் ஓடத் தொடங்கியதும், வலியும் வேதனையும் களைப்பும் இளைப்பும் எங்கு போனதோ தெரியவில்லை.

100 மீட்டர், 200 மீட்டர், தடைதாண்டி ஓட்டம் (Hurdles) நீளத்தாண்டும் போட்டி அத்தனையிலும் கலந்து கொண்டாகி விட்டது. அப்போழுது அவன் ஆற்றிய சாதனையைப்பாருங்கள், போட்டிமாலை 3.15 க்குத் தொடங்கியது. 100 கெஜ தூரத்தில் வெற்றி பெற்றவுடன், அவன் ஓடிய வேகத்தின் நேரம் 9.4 வினாடிகள், அது உலக சாதனையாக இருந்தது.

அடுத்த போட்டியானது 3.25க்கு நீளத்தாண்டுவதில் போட்டி. அவன் தாண்டிய தூரம் 26 அடி 8 $\frac{1}{4}$ அங்குலம். அதுவும் உலக சாதனையாக அமைந்தது.

மூன்றாவது போட்டி 3.45க்கு. 220 கெஜ ஓட்டப் போட்டி. அவன் ஓடி முடித்த நேரம் 20·3 வினாடிகள். அதுவும் உலக சாதனைதான்.

நான்காவது போட்டி 4-00 மணிக்கு நடந்தது. தடை தாண்டி ஓடும் போட்டி. 220 கெஜ ஓட்டத்தில் 22.6 வினாடிகளில் ஓடி, அதுவும் உலக சாதனையாக ஆக்கினான் அந்த மாவீரன்.

ஒரு மணி நேரத்திற்குள்ளாக, மூன்று உலக சாதனைகளை நிகழ்த்தி, நான்காவது போட்டியில் உலக சாதனைக்கு இணையாக நிகழ்த்திய அந்த மாவீரன், போட்டிகள் முடிந்த பிறகு, நடந்து செல்லவில்லை. அவனைத் தூக்கிக் கொண்டு தான் சென்றார்கள். திண்மை நிறைந்த நெஞ்சின் முன்னே நிற்கப் பயந்து ஓடி ஒளிந்த வலியும் வேதனையும், போட்டிகள் முடிந்த பிறகு வந்து சூழ்ந்து கொண்டன. உலகம் அவனைப் பாராட்டிய பொழுது அவன் மரண வேதனைக்குள் அமிழ்ந்து கிடந்தான்.

பிறகு, கொஞ்சங் கொஞ்சமாக முதுகு வலி குறையத் தொடங்கியது. கலிபோர்னியாவில் ஒரு டாக்டர் மேற்கொண்ட தீவிர சிகிச்சையின் காரணமாக, ஓவன்சின் முதுகு வலி மறைந்தது. அடுத்து வந்த ஒலிம்பிக் பந்தயம் அவனை மேலும் பலம் உள்ளவனாக மாற்றிவைத்தது. அதற்கும் காரணம் இருக்கத்தான் இருந்தது.

1936ஆம் ஆண்டு ஜெர்மனியில் ஒலிம்பிக் பந்தயங்கள் ஏற்பாடு ஆகியிருந்தன. சர்வாதிகாரி இட்லரின் கீழ் அப்பொழுது ஜெர்மனி அடங்கிக் கிடந்த நேரம்! தனது ஆரிய இனமே ஆற்றல் மிக்க இனம் என்று இட்லர் வெறியோடு பேசிக்கொண்டு உலகத்திலே வெல்லக்கூடிய ஆற்றல் தனது வீரர்களுக்கு மட்டுந்தான் உண்டு என்று கர்வத்துடன் கர்ஜித்த நேரம். அமெரிக்கா நீக்ரோ வீரர்கள் அனைவரும் தோல்வியடைவார்கள்' என்று சோதிடம் கூறிக் கொண்டிருந்த நேரத்தில், டான் புயல் என்று விளையாட்டுத் துறை எழுத்தாளர்களால் வருணிக்கப்பட்ட ஜெசி ஓவன்ஸ்

அந்தபோட்டிகளில் கலந்து கொள்ள ஜெர்மனிக்கு வந்திருந்தான்.

முதல் போட்டியான 100 மீட்டர் ஓட்டத்தில் 10.3 வினாடிகளில் ஓடி, உலகசாதனை பொறித்த ஜெசி ஓவன்ஸ் தங்கப்பதக்கத்தைப் பெற்று, இட்லரின் வெறிப்பேச்சுகளை முறியடித்து, வெற்றிக்கொடி நாட்டினான். அடுத்து,அவனுக்கு மிகுந்த சோதனை நிறைந்த போட்டியாக நீளத்தாண்டும் போட்டி வந்தது.

உலக நாடுகளுக்கிடையே இருந்துவரும் வீரர்கள் அனைவரையும் முதலில் தாண்டச் செய்து, 'தகுதிபெற' சோதனை செய்வார்கள்.

அதிலேதான் அந்த நிகழ்ச்சி நடந்தது. அங்கு மொழிக் குழப்பம் இருக்கும். அவரவர் தாய்மொழியில்தான் பேசிக் கொள்வார்கள். ஆங்கிலம் அவ்வப்பொழுதுதான் வெளிப்படும்.

நீளத்தாண்டலுக்குத் தயாராக இருந்த ஜெசி ஓவன்ஸ், நடுவர் அழைத்தவுடன் தாண்டப் போனால், தாண்டுவதற்குரிய நேரம் முடிந்து விட்டதென்று, அதிகாரிகள் கூறி, சிவப்புக் கொடியைக் காட்டி விட்டனர். ஆகவே, முதல் வாய்ப்பு (Chance) முடிந்து போயிற்று. அதிகாரிகளை எதிர்த்துப் பேசமுடியாதல்லவா! அவர்கள் திட்டமிட்டபடி, முதல் வாய்ப்பைக் கெடுத்து விட்டார்கள்.

அடுத்த வாய்ப்பு வந்தது, அதில் சரியாகத் தாண்டவில்லை. அதாவது, தாண்டக் கூடிய இடத்தில் உள்ள கோட்டினை மிதித்தாகிவிட்டது என்று (Foul) குற்றத்தைக் கூறி அந்த வாய்ப்பையும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆக, அந்தப் போட்டியில் கலந்து கொள்ள இனி ஒரே ஒரு வாய்ப்புத்தான் இருந்தது.

எல்லோருடைய முகத்திலும் கவலைக்குறி தென்படத் தொடங்கியது. ஜெசி ஓவன்சின் பயிற்சியாளர்க்கு என்ன

செய்வது என்று புரியவில்லை. தைரியம் சொல்லலாம் என்று ஓவன்சிடம் கூறவந்த பொழுது, ஓவன்சே அவரிடம் சென்று, இங்கு என்ன நடக்கப் போகிறது' என்று பாருங்கள் என்று அவருக்கு தைரியம் கூறிவிட்டுத் தன் கடமையிலே கண்ணுங் கருத்துமாக இருந்துவிட்டான்.

இரண்டு வாய்ப்புக்களையும் இழந்து மூன்றும் வாய்ப்பு சரியாக நடந்து, குறித்து வைத்திருக்கும் எல்லையாகிய தூரத்தைத் தாண்டிக்கடந்தால்தான், பிறகு அந்தப்போட்டி யிலே கலந்து கொள்ள முடியும். இங்கே மீதி இருப்பது ஒரே வாய்ப்புத்தான். அதிலே தவறு இல்லாமலும், தகுதிபெறவும் தாண்டியாகவேண்டும். கொஞ்சங் கூட குழம்பிப் போகாமல், கவலை கொள்ளாமல், மன உறுதியை இழக்காமல், தைரியத் துடன் ஓவன்ஸ் தன் வாய்ப்புக்காகக் காத்திருந்தான்! உலக சாதனை நிகழ்த்திய வீரனின் உத்வேகம் நிறைந்த தாண்ட லுக்காக, உலகமே அப்பொழுது காத்திருந்தது.

இட்லர்ஆண்ட ஜெர்மனி நகரத்தில் வாழ்ந்த ஆரிய இனத்தின் வாரிசாக, ஒலிம்பிக் பந்தயத்தில் நீளத்தாண்டும் போட்டியில் கலந்துகொள்ள ஒரு வீரன் வந்திருந்தான். அவன் பெயர் லட்ஸ் லாங் (Lutz Long) என்பதாகும். நீக்ரோ இனம் தாழ்ந்த இனம் என்று அவனது சர்வாதிகாரி ஆணவத்துடன் கூறினாலும், லட்ஸ் லாங் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

சாதி, மதம், இனம், குலம், ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி, அனைவரும் சமம் என்று ஏற்றுக்கொள்கின்ற சமுதாய மறுமலர்ச்சிப் பூங்காவாக அல்லவா விளையாட்டுத் துறை விளங்குகிறது. அந்த சமரசப் பூங்காவில் பூத்த நறுமலராக விளங்குகிறான் லட்ஸ் லாங். உலகம் போற்றும் உன்னத வீரன் ஜெசி ஓவன்ஸ் இரண்டு முறை தனது தாண்டும் முயற்சியில் தவறிப்போன நிலையைக் கண்டு தத் தளித்துப் போனான். மனம் கலங்கிப் போனான்.

'போனால் போகட்டும். நல்லது தானே, இவன் தவறிழைத்துத் தோற்றால் நாம் வெற்றியடைந்து விடலாம்' என்று அவன் ஓவன்சின் துன்ப நிலையில் இன்பங் காண நினைக்கவில்லை. அதற்குமாறாக, அவன் ஓவன்சுக்கு உதவி செய்ய நினைத்தான். அவனுடைய ஜெர்மன்மொழி, இருவருக்கும் இடையே குறுக்கே நிற்கவில்லை அன்புதான் அகிலத்தை இணைக்கும் இன்ப மொழி ஆயிற்றே! அவன் அருகில் சென்றான். தாண்டும் தூரத்தை அளந்து கொள்ள அளக்கும் நாடாவைப் (Tape) பிடித்துக் கொண்டான். அன்புச் செய்கை அங்கே இன்பமொழியாக உலா வந்தது. ஓடிவந்து தாண்டுகின்ற இடத்தில், ஓவன்சின் வியர்வை படிந்த சட்டையைக் கொண்டு போய் அடையாளம் வைத்தான். இந்த நிலையில்தான், தன் பயிற்சியாளரிடம் ஓடிவந்து, 'நான் செய்வதைப் பொறுத்திருந்து பாருங்கள்' என்று கூறிவிட்டுப் போனான். தாண்டும் இடத்தில் கால் வைத்துத் தாண்டினால் தானே அவர்கள் 'தவறு' என்று கூறுவார்கள்!

ஆகவே மூன்றுவது முறை, தாண்டுவதற்காகத் தன் பெயரை அழைத்த போது ஓடிய ஓவன்ஸ், ஒரடி தூரம் தாண்டுமிடத்திலிருந்து பின்னால் வைத்துத் தாண்டினான். அது சரியான தாண்டல் என்று சைகை வந்தது. பயிற்சியாளர் நீண்ட பெருமூச்செறிந்தார்- நிம்மதியாகத்தான். எவ்வளவு தூரம் தாண்டினான் என்பதை அதிகாரிகள் அளந்தார்கள். தாண்டுவதற்குத் தகுதி வாய்ந்தவன் என்ற அறிவிப்பும் பிறகு தொடர்ந்தது.

அதனைத் தொடர்ந்து 5வது தாண்டும் வாய்ப்பில், ஜெசி ஓவன்ஸ், முதலாவதாக வந்து வெற்றி பெற்றதோடு அல்லாமல், உலக சாதனையையும் நிகழ்த்தினான். அந்த தூரம் 26 அடி 5¼ அங்குலமாகும். அந்த சாதனையானது ஏறத்தாழ இருபத்திநான்கு ஆண்டுகள் ஒலிம்பிக்சாதனையாகவும்விளங்கி நின்றது, 1960ஆம் ஆண்டு ரால்ப் பாஸ்டன் எனும் அமெரிக்கா நீக்ரோ வீரன் தான் அந்த சாதனையை முறியடித்தான்.

வெற்றி மேடையில் நின்று, தங்கப்பதக்கத்தை வாங்கிக் கொண்டு, ஒலிம்பிக் மைதானத்தை விட்டு ஓவன்ஸ் வெளியே வந்த போதும், வியர்வை படிந்த சட்டையைத் தன் தோளில் போட்டுக்கொண்டு, ஓவன்ஸ் தோள் மேல் கை போட்டு அணைத்தவாறு வந்தான் லட்ஸ்லாங். பார்வையாளர்கள் எல்லோரும் பரபரப்படையவில்லை. ஒற்றுமையான உள்ளங்களைக் கண்டு கைதட்டி ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர்.

ஒரே ஒலிம்பிக் பந்தயத்தில், நான்கு தங்கப்பதக்கங்களை வென்ற ஓவன்ஸ், எத்தனை முறை அந்தப் போட்டிகளில் பங்கு பெற்றிருக்கிறான் பாருங்கள். நான்கு முறை 100 மீட்டர், நான்கு முறை 200 மீட்டர்; இரண்டு முறை 4X100மீ. தொடரோட்டம்; இரண்டு முறை நீளத்தாண்டல், இவ்வாறு 12 முறை போட்டிகளில் கலந்து கொண்ட போது, தான் கலந்துகொண்ட ஒவ்வொரு போட்டி நிகழ்ச்சியிலும் ஒலிம்பிக் சாதனையை நிகழ்த்தினான் அல்லது ஒலிம்பிக் சாதனைக்கு இணையான நேரத்தை ஏற்படுத்தினான் என்று ஒலிம்பிக் சாதனைப் பட்டியல் விளக்குகின்றது.

எதிர்ப்புக்கள் ஏராளம் இருந்த ஜெர்மன் நாட்டில், சர்வாதிகாரி இட்லரின் ஏராளமான நோக்கில், எரிச்சல் மிகுந்த பார்வைக்கு ஆளான ஓவன்ஸ், 'யார் கெடுத்தாலும் கெடமாட்டேன்' என்று மனோதைரியத்துடன், தன் திறமையை வெளிப்படுத்திக் காட்டி வீரப்பதக்கங்களை வென்றான். உலகமே அவனது ஆற்றலைப் போற்றியது. புகழ்ந்தது. இகழ்ந்த கூட்டம் எதுவும் செய்ய முடியாது தலையைத் தாழ்த்தி, மௌனமாக வணக்கம் செய்தது.

வெற்றி வீரனாக தாயகம் திரும்பி வந்த ஜெசி ஓவன்சுக்கு அமெரிக்க நாடே வீர மரியாதை அளித்து கௌரவித்தது. உண்மையான உழைப்புக்கு முன்னே, பொறாமையும் சூதும் சூழ்ச்சியும் என்ன செய்துவிட முடியும். அதன் பின்னும் ஓவன்ஸ் அயர்ந்துவிடவில்லை. எல்லாம் முடிந்தது என்று

ஓய்ந்து போய் விடவும் இல்லை. மேலும் பல சாதனைகளை செய்து காட்டினான்.

மோட்டார், லாரி வேகத்திற்கு இணையாக ஓடினான். நாய்களின் வேகத்தையும் மிஞ்சும் வகையில் ஓடினான். ஹவானா எனும் இடத்தில், பந்தயக் குதிரையுடன் போட்டி இட்டு ஓடி வென்று காட்டினான் என்றால் அம்மாவீரனின் ஓட்ட வேகம் தான் என்னே! அமெரிக்காவில் மட்டுமல்லாது, பிரான்சு, நார்வே, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் ஓடிக்காட்டிஅற்புத சாதனைகளை நிகழ்த்தினான்.

1936ல் பெர்லின் நகரில் ஒலிம்பிக் சாதனை நிகழ்த்திய வீரன், 1951 ஆம் ஆண்டு அங்கே மீண்டும் தோன்றினான். அமெரிக்க தூதரகம் அந்த விழாவை நடத்திக் காட்டியது. 75,000 மக்களுக்கு மேல் ஜெர்மானியர்கள் பார்வையாளர் களாக இருக்கையில் அமர்ந்திருக்க, விளையாட்டு உடையுடன் ஜெசி ஓவன்ஸ், ஒயிலாக ஓடி வந்தபோது, அந்த 75,000க்கு மேற்பட்ட பார்வையாளர்களும் ரசிகர்களும் மரியாதையுடன் எழுந்து நின்று கையொலி எழுப்பி, ஆரவாரம் செய்து அக மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். வயதானாலும் உடலை வைத்திருந்த அழகும், அதே சக்தியையும் திறமையையும் போற்றி காத்து வைத்திருந்த பாங்கையும் கண்டு, நாடே போற்றியது.

உலக மகாவீரனாக மலர்ந்த ஜெசி ஓவன்ஸ், ஏழை குடும் பத்திலே தோன்றியவன். அன்றாட உணவுக்கும் உடைக்கும் ஆளாய் பறந்தவன். நீக்ரோ இனம் என்ற நிலையில் நெட்டித் தள்ளப்பட்ட போதும், வறுமையால் வதங்கிய போதும் தன் லட்சியத்தைக் கைவிடவில்லை. பிறர் கெடுப்பதை அறிந்தும் அவர்களைக் கெடுக்க நினைக்கவில்லை. மாறாக தன் இலட்சியத்தை வளர்த்துக்கொண்டான். லட்சியப் பிடிப்பை வளர்த்துக் கொண்டான். பயிற்சியில் தன்னைக் கலந்தான். வாழ்க்கையில் உயர்ந்தான். இன்று வானளாவிய புகழில் வான் நட்சத்திரமாக உலக அரங்கில் மின்னித் திகழ்கிறான். ஜெசி ஓவன்ஸ் நமக்கெல்லாம் வழிகாட்டும் நல்ல துருவ நட்சத்திரம் அல்லவோ!

# 7. சோதனைக்குள் சாதனை!

புகழ் நிறைந்த புதிய சாதனை, புவியில் மிகுந்திருக்கும் விளையாட்டு ரசிகர்கள் அனைவரும், அவன் பெயர் சொல்லும் பொழுதே பூரித்துப்போகின்ற அளவுக்குப் பெருமை படைத்த புதிய சாதனை. 22 வயதுக்குள்ளே இப்படியோர் சாதனையா! அவன் முன்னேற்றத்தின் பின்னணியில் எத்தனை சோதனைகளும், வேதனைகளும் ஒளிந்து கொண்டிருந்தன!

டென்னிஸ் உலகில் இன்றைய உலக வெற்றி வீரன் என்று ஏகோபித்த வண்ணம் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் மாவீரன் பிஜோன் போர்க் (Bjorn Borg) ஸ்வீடன் தேசத்தைச் சேர்ந்தவன். உழைப்பால் உயர்ந்த உத்தமன்.

தன்னையறிந்தவன் தலைவன் என்னும் தாரக மந்திரத்திற்குத் தலையான சான்றாகத் திகழ்கின்றவன். வீதியிலே அரட்டை, வீட்டிலே குறட்டை, வேலையிலே அசட்டை என்று திரிகின்ற இளைஞர்களையும், இங்கே நாம் காண்கிறோம். வாழ்வில் ஏதுமில்லாமல் ‘கண்டதே காட்சி, கொண்டதே கோலம்’ என்று அலைகின்ற வாலிபர்களையும் நாம் நிறையவே காண்கிறோம்.

ஒவ்வொருவரும் வாழ்விலே தான் செல்லப் போகும் நெறிகளையும் முறைகளையும் வகுத்துக் கொண்டு, தொகுத்

துக் கொண்டு, தொல்லைதான் என்றாலும், துயர்தான் என்றாலும், இளமையின் எழுச்சியை மாற்றிக் கொள்ள முடியாத சோதனைதான் என்றாலும், அத்தனையையும் தான் கொண்ட லட்சியத்தின் முன்னே போட்டு விட்டு, 'உழைப்பே உண்மையான இன்பம்' என்ற உயர்ந்த நெறியில், பயிற்சி செய்த பண்பாளன் போர்க், நமக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக அல்லவா விளங்குகிறான்!

ஸ்வீடன் தேசத்தில் உள்ள சோடர்டால்ஜி எனும் நகரில் தோன்றிய போர்க், தன் பெற்றோர்க்கு ஒரே செல்ல மகன் அவன் தந்தையோ மேசைப் பந்தாட்டத்தில் சிறந்த வீரர்.. அவர் பெற்ற பெரிய வெற்றிகள் பல உண்டு.அரிய பரிசுகளும் நிறைய உண்டு. அவற்றில் ஒன்று அவர் பெற்ற டென்னிஸ் மட்டையும். அந்த டென்னிஸ் மட்டையை தன் பிரிய மகனுக்குப் பரிசாக அளிக்கிறார். மட்டையைப் பெற்ற போர்க், பொம்மை கிடைத்த குழந்தையைப் போல போற்றி மகிழ்கிறான்.

டென்னிஸ் மட்டையுடன், தந்தையும் மகனும், விளையாட வேண்டும் என்ற விருப்பத்துடன், டென்னிஸ் சங்கம் ஒன்றுக்குப் போகின்றனர். அவர்களுக்கு அங்கே இடம் இல்லை என்று ஒதுக்கப்படுகின்றனர். முதல் ஆசையே இப்படி அவமானத்தில் முடிந்து போனதென்று தந்தையும் மகனும் நொந்து போய் விடவில்லை. அந்த வேதனையை விளையாட்டாக எடுத்துக்கொண்டு, வீட்டிற்கு வருகின்றனர்

ஒன்பது வயதினன் போர்க்கின் டென்னிஸ் ஆட்டம். அவன் வீட்டில் கார் நிறுத்தும் இடத்தின் வெளிச் சுவற்றில் தொடங்குகிறது.சுவற்றில் பந்தை அடித்துஅடித்து ஆடுகின்ற முதல் பயிற்சியை அவனே ஆரம்பித்துக் கொள்கிறான். அந்த ஆசையும் மகிழ்ச்சியும் ஒரு மணி நேரத்திலோ,ஒரு நாளிலோ உச்சக் கட்டத்தில் எழுந்து, பின் ஒரு நாளில் ஆடிஅடங்கி அமிழ்ந்துபோய் விடவில்லை. காலையில் தொடங்கிவிட்டால் இருள் கவிழ்கின்ற நேரம் வரை, பந்தை சுவற்றில் அடித்துக் கொண்டே ஆடிக்கொண்டிருந்த சிறுவனை, அவனது

பெற்றோர்கள் வந்து இழுத்துக்கொண்டு, சில சமயங்களில் கட்டாயப்படுத்தித் தூக்கிக் கொண்டுப் போகும் வரை தொடர்ந்து சென்றது.

தனது விருப்பம் போல் எல்லாம் அவன் விளையாடிப் பார்த்தான். தனக்கு ஏற்றாற்போல் பந்தாடும் மட்டையைப் பிடித்துக் கொண்டான். இப்படித்தான் ஆடவேண்டும் என்று யாரும் கற்றுத் தராமலேயே, இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலே டென்னிஸ் ஆட்டக்கலையைக் கற்றுக் கொண்டான். குரு இல்லாமல் கலை வளராது என்றாலும், இடைவிடா பயிற்சி அவனை இணையற்றவனாக மாற்றிக் காண்பித்தது. உண்மையான லட்சியம், அவனை உயர்ந்த இடத்திற்கு ஏற்றி வைத்தது.

எந்த சங்கத்தில் அவனுக்கு இடம் இல்லை என்று கை விரித்து அனுப்பினார்களோ, அதேஇடத்தில் அவர்களே விரும்பி ஏற்று வரவேற்கும் வகையில் ஆடினான் அந்தசிறுவன். சிரத்தையுடன் தேர்ச்சிப் பெற்ற போர்க்கின் ஆட்டத்தைக் கண்டு, அவர்கள் சிரம் தாழ்த்திச் சேர்த்துக்கொண்டனர்.

சிறுவனின் பேராற்றலைக் கண்டார் ஒரு பயிற்சியாளர், பெர்சி ரோஸ்பெர்க் என்பவர். சிறந்த ஆட்டக்காரர்களைக் கண்டு பிடிக்க முயன்ற அவர் கண்களில், போர்க் சிக்கிக் கொண்டான். அவனை அவர் அழைத்தார். 'இரண்டு படகுகளில் கால் வைத்துப் பயணம் போகின்றவன், எந்தப்பக்கமும் போக முடியாது. படகு விலக விலக பாதையும் மாறும். கால்களின் நிலையும் கிழியும்' என்று ஓர் உதாரணத்தைத் தந்தார் அவர்.

'வளைகோல்பந்தாட்டத்திலும் டென்னிஸ்ஆட்டத்திலும் ஆசை வைக்காதே. ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடு' என்று அறிவுரை கூறினார். தெளிவு பெற்ற போர்க், டென்னிஸ் ஆட்டத்தையே தேர்ந்தெடுத்துக் கொண்டான். பின்னர் தொடர்ந்து 4 ஆண்டுகள் கடும் பயிற்சி செய்தான்.

இந்த வயதில், தன்னோடொத்த சிறுவர்களுடன் சேர்ந்து கொண்டு கும்மாளம் போடுகின்ற பருவத்தில், எல்லாவற்றை யும் துறந்து, கொண்ட தன்லட்சியத்தில் ஒன்றிப் போனான். கடும் பயிற்சி, நேர்மையான பழக்க வழக்கங்கள், தேவை யான ஓய்வு, உறக்கம் என்று தன் வாழ்வு முறையை ஒழுங்கு படுத்திக் கொண்டான்.

இசையில் ஆசை, மீன் பிடிப்பதில் பேராசை என்ற வழக்கங்களைக்கூட கட்டுப்படுத்திகொண்டு, 'ஒன்றேலட்சியம், ஒன்றே கொள்கை, அதுவே வாழ்க்கை' என்று பயிற்சிகளைத் தொடர்ந்து, விதிமுறைகளுடன் பயிற்சிசெய்த போர்க், 17ம் வயதில் உலகத்தின் சிறந்த ஆட்டக்காரர்களில் ஒருவனாக உயர்ந்தான்.

உலகத்திலேயே சிறந்த போட்டி என்பது இங்கிலாந்தில் நடக்கும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியாகும். அதில் தனது 19ம் வயதில் முதல் முறையாக விம்பிள்டன் பட்டத்தை வென்றதோடல்லாமல், மூன்று ஆண்டுகளும் தொடர்ந்து (1976,1977,1978) வென்று ஒரு புதிய சாதனை யையே படைத்துவிட்டான். 41ஆண்டுகளுக்கு முன்னே இங்கி லாந்து வீரன் ஃபிரட் பெர்ரி (Fred Perry) என்பவர் நிகழ்த் திய சாதனையை, 1978ம்ஆண்டு மாற்றிஅமைத்தான் போர்க்.

போட்டிகள் நடக்கின்ற நாட்களில் 9மணிநேர உறக்கம். இரண்டு 2மணி நேரம் பயிற்சி. ஆனால், விருந்துகளிலும், கலந்து கொள்வதில்லை என்ற மனத்திண்மையுடன் உடல் வளத்தைக்காப்பதில் மன்னனாக விளங்குகிறான் போர்க்.

போராட்டம் நிறைந்த விளையாட்டுப் போட்டியில் கோபம் அடையாது, தன்னிலை இழக்காது, நற்பண்புகளுக்கு இலக்கணமாகத் திகழ்வதால்தான், போர்க்கின் புகழ்இன்று உலகமெங்கும் கொடி கட்டிப் பறக்கிறது. பெண் ரசிகைகள் தனக்கு அதிகம் உண்டு என்றாலும், அதிலும் அடக்க உணர் வோடு நடந்து கொள்ளும் திறமையில் போர்க் ஒரு முனிவனாக விளங்குவதால் தான், மூன்று மணி நேரம்

நடக்கின்ற இடைவிடாப் போட்டியிலும் இளைப்போ களைப்போ இன்றி ஆட முடிகின்றது.

மூன்றாவது முறை விம்பிள்டன் போட்டியில் வென்ற பிறகு, அதே இடத்தில் மண்டியிட்டு இறைவனுக்குப் பிரார்த்தனை செய்த தன்மையானது, உலகமகா வெற்றிவீரன் ஜெசி ஓவன்ஸ் சொன்ன மூன்று கருத்துக்களுக்கு சான்றாக அல்லவோ விளங்குகிறான்!

'தலைசிறந்த விளையாட்டு வீரன் மேலும் சிறப்படைய வேண்டுமானால், அவன் முதலில் தன்னையறிந்து கொள்ள வேண்டும். தன்னைச் சுற்றியுள்ளவர்களை புரிந்து கொள்ள வேண்டும். அதற்கும் மேலாக தெய்வபக்தியுள்ளவனாகத்திகழ வேண்டும்' என்பது தான் அந்த முத்தான மூன்றுகருத்துக்கள்.

தன்னையறிந்து, எதிராளியிடமும் இன்முகத்துடன்பழகி, தெய்வ பக்தி நிறைந்தவனாகவும் விளங்குகின்ற போர்க், தன் வாழ்க்கையில் வந்து நின்ற சோதனைகளையெல்லாம் வென்று வீழ்த்தி, அவற்றையே சாதனைகளாக மாற்றிக்கொண்டான்.

மனிதன் நினைத்தால் முடியாதது உண்டோ என்பதற்கு போர்க், தலையாய சான்றாக திகழ்கின்றதைக் கண்டு, நாமும் அவன் வழியைப் பின்பற்றுவோம். புகழ் படைப்போம். பெருமை பெறுவோம்.

# 8. அழைப்பும் உழைப்பும்!

உணவுக்கும் உடைக்கும் கூட பணம் இல்லாத நிலையில் வதியும் ஏழைக் குடும்பம் அது.பணம்தேடித்தன் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கும் தந்தையின் நிலையோ தாளாத சோக நிலை. போர் வீரனாகப்பணி புரிந்து, அதன் விளைவாகப்போரில் ஏற்பட்ட விழுப்புண்ணால், செயல்படாத கால்களுடன் நடக்க இயலாத நிலையில் குடும்பத் தலைவனான தந்தை ஒரு புறம். குடும்பத்தின் சுமையை ஏற்றுக்கொண்டால் மட்டும் போதாது என்று, இரவு பகல் பாராது ஓடாகத் தேய்ந்து, வேலைக்காரியாகப் பணிபுரிந்து வரும் தாய் மற்றொருபுறம்.

இவர்களுக்கு இளைய மகனாகத் தோன்றியவன் கதியும் அதே கதிதான். நன்றாக நிமிர்ந்து நின்று, நடக்கத் தெரியவே பல ஆண்டுகள் ஆயின என்ற வரலாறு கொண்ட சிறுவன் அவன். அதனால் அவனை மிகவும் செல்லமாக, சோம்பேறிப் பையன் என்று மற்றவர்கள் அழைப்பதுண்டு.

இப்படிப்பட்ட ஒரு சிறுவன், ஒலிம்பிக் பந்தயம் ஒன்றில் உலகத்திலே மிகவும் விரைவாக ஓடும் ஓட்டக்காரன் இவன் என்று புகழ்பாடும் அளவுக்கு உயர்ந்து விட்டிருக்கிறான் என்றால், அவன் பெற்ற அழைப்பா, இல்லை அவன் மேற் கொண்ட உழைப்பா என்று நாம் தேடித் திணறும் அளவுக்கு அமைந்திருக்கிறது அவன் பெருமை.

தனது பள்ளிச்செலவுக்காக 'ஷூ பாலிஷ்' போட்டு பணம் சம்பாதித்தான் என்ற 'வாழ்க்கைக் குறிப்புடன்' அவனது வரலாற்றைப் படிக்கும் பொழுது, பஞ்சத்திலும், பசியாலும் அடிபட்டுப் பரிதவித்த அவன் பிற்காலம், உன்னதமான உற்சாகம் நிறைந்த உழைப்பினால் எப்படி பிரகாசம் பெற்றது, பேரும் புகழும் உற்றது என்ற உண்மையை நிதர்சனமாகப் பார்க்கிறோம் அல்லவா!

இத்தகையவரலாற்று நாயகனான மாவீரன் பெயர் பாப் ஹேய்ஸ் (Bob Hayes) என்பதாகும். அமெரிக்க நீக்ரோ இனத்தின் வாரிசுதான் இவனும். இவனுக்கு ஒரு அண்ணன். பெயர் ஏர்னஸ்ட் (Arnest). இந்த ஏர்னஸ்டுக்கு ஓர் ஆசை. அதாவது, தான் குத்துச் சண்டையில் உலக மாவீரனாக வர வேண்டும் என்பது. ஏர்னஸ்ட் ஆசைப்பட்ட பொழுது, சிலர் தந்த அறிவுரையானது, 'ஓடிப் பழகு' என்பதுதான். ஓடிப் பழக பழக நெஞ்சுரம் (stamina) அதிகமாகும் என்று அறிந்த ஏர்னஸ்ட், தனியாக ஓடிட சஞ்சலப்பட்டான். கூட யாராவது ஓடி வந்தால், அதிக நேரம், அதிக தூரம் ஓடலாம் என்று எண்ணம். உண்ணுவதற்கென்றால் துணைவருவார்கள், ஓடுவதற்கு யார் வருவார் இந்தக்காலத்தில்!

அண்ணன் கண்ணிலே அகப்பட்டுக் கொண்டான் பாப். 'நீ என்னுடன் கூட தினமும் காலையிலே ஓடி வரவேண்டும்' என்று முதலில் செல்லமாக அழைத்தான். பாப்தான் சோம்பேறிப் பையனாயிற்றே. ஓடுவதை வேப்பங்காயாக நினைத்தான். முடியாது என்று மறுத்தான். அன்புக்குரலாகப் பிறந்த அவனது அழைப்பு,கொஞ்சம் கரடுமுரடாக மாறியது. அதற்கும் மசியாத தம்பிக்கு அடுத்தக் கட்டம் வந்தது.

'அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவ மாட்டான்' என்ற பழமொழியை நிஜ வாழ்க்கையில் பிரயோகம் பண்ணத் தொடங்கிவிட்டான் அண்ணன். அவனுக்கு ஆசை குத்துச் சண்டை வீரனாக அல்லவா வர வேண்டும்! வேறு யாரையாவது அடித்தால், அவனும் அல்லவா எதிர்த்துத் தாக்க ஆரம்பித்து விடுவான் என்ற

எண்ணமோ என்னவோ, வர மறுக்கின்ற தம்பிக்கு வகை யாகக் கொடுக்க, வேகமாகக் கொடுக்க ஆரம்பித்தான். முகத் திலே குத்துக்கள் சரமாரியாக விழ, பின்னாலே உதைகள் பெரும் இடியாகப் பட, பாப் ஓட ஆரம்பித்தான்.

அடி தாங்க மாட்டாமல் பயந்து கொண்டு ஓடத் தொடங்கியவன், பின்னர் அண்ணன் பின்னால் ஓடினான். சில நாட்கள் கழித்து அண்ணனுக்கு முன்னாலே ஓடினான். மூத்த வன் மூச்சுவாங்க நின்ற பின்னும் ஓடினான். மூத்தவன் மூச்சு வாங்க நின்ற பின்னும் வேகமாக ஓடினான். இந்த ஓட்டப் பயிற்சியை வைத்துக்கொண்டு, பள்ளிக்கூடத்திலும் ஓடினான். அதாவது பந்தயம் கட்டிக் கொண்டு ஓடினான். ஓடிய பொழுதெல்லாம் வெற்றியும் கிடைததது. பணமும் கிடைத் தது. இந்த அளவில், பாப் ஹேய்சின் உழைப்பு உயர்ந்து கொண்டே வந்தது. அழைப்பு விட்ட அண்ணன் அதே நிலையில் நின்று போனான்.

ஓட்டத்தில் கெட்டிக்காரனாக விளங்கிய பாப் ஹேய்ஸ், அமெரிக்க நாட்டின் சார்பாக ஓடும் ஓட்டக்காரனாக 1964ம் ஆண்டு, டோக்கியோவில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்திற்குச் சென்றான். அவன் 100 மீட்டர் தூரத்தை 10 வினாடிகளுக்குள் ஓடி, உலக சாதனையையும்ஒலிம்பிக் சாதனையையும் நிகழ்த் தினான் என்ற புகழை மட்டும் அவன் பொறிக்கவில்லை.

100 மீட்டர் தூரத்தில் அவன் முதலாவதாக வந்த பொழுது,அவனுக்கும் இரண்டாவதாகவந்தகியூபாநாட்டின் வீரனான என்ரிக் பிகரோலாவுக்கும் இடையே இருந்த தூரம் 3 கெஜம் ஆகும். அதாவது இரண்டாவது வந்த வீரன் ஓடி முடித்த நேரம் 10.2 வினாடிகள், நேரம் கழித்து வந்த வீரனுக்கு முன் முடித்த இது போன்ற சாதனையை இதுவரை யாரும் நிகழ்த்திடவில்லை என்ற பெருமையையும் படைத்தான் ராபர்ட் ஹேய்ஸ்.

செல்லப் பெயருடன் பாப் என்று அழைக்கப்பட்ட ராபர்ட்டின் சாதனையானது, 4 x 100

மீட்டர் தொடரோட்டத்தில் நான்காவது ஓட்டக்காரனுக ஓடி முடித்த போது. ஓடிய நேரம் 8.6 வினடிகள் என்றும் கணக்கிட்டிருக்கின்றார்கள். அப்படியென்றல் அந்த வீரனின் வேகம் தான் என்னே!

நடக்கத் தெரியாத பையன் என்ற ஒரு நையாண்டிக்கு ஆளானஒருவன், ஓடுவதற்காக குத்துக்களேயும் உதைகளேயும் வாங்கியவன் உற்சாகமாக உழைக்க வேண்டும் என்று எண்ணி உழைத்தான். உண்மையான உழைப்பு அவனே உலகத்தாரின் முன்னே உயர்த்தியது. இன்று அழியாப் புகழில் அவன் வாழ்கிருன். உலகம் உள்ளளவும் அவன் பெயர் நிலைத்து நிற்கும்.

இளமையின் எழுச்சியை சிறப்பான வழியில் பயன் படுத்தி, சிறப்பினைப் பெற்று, புகழ்பெற்ற பாப் ஹேய்ஸ், நமக்கெல்லாம் நல்ல வழிகாட்டியன்றே!

# 9. தொடேன்! விடேன்!

இப்படியா ஓடுவார்கள்! என்று பார்ப்பவர்கள் எல்லோரும் பரிகாசம் செய்தார்கள். அந்த மனிதன் ஓடுவதை, விநோதப் பொருள் ஒன்றை வேடிக்கை பார்ப்பது போலப் பார்த்து, விவஸ்தை கெட்டத்தனமான தன்மையில் விமர்சனம் செய்தார்கள்.

உலகப் பந்தயங்களில் இதுவரை நடந்த ஓட்டப் போட்டிகளில் இந்த வீரனைப்போல ஓட்டத்தில் ஓடும் 'ஸ்டையில்' இல்லாதவனை, தெரியாதவனை யாரையுமே கண்டதில்லை என்ற அளவில் பேசிக்கொண்டார்கள்.

'நெஞ்சிலே கத்தியால் குத்தப்பட்டவன் நெஞ்சினை அழுத்திப் பிடித்துக்கொண்டு தன் உயிரைக் காக்க ஓடுவது போல, அவன் ஓடும் அழகு இருக்கிறது, என்று ஒரு விளையாட்டுப் பத்திரிக்கை ஆசிரியர், அவன் ஓட்டத்தை வருணித்தார்.

'ஓட்டத்தில் ஓடும் பொழுது எல்லாத் தவறுகளையும் செய்கின்றான். ஆனால் கடைசியாக 'வெற்றி பெற்று

விடுகின்றான்" என்று காரணம் புரியாமல் குழம்பிய நிலையில் வேறொரு ஆசிரியர் அவனைப் பற்றி விளக்கம் தந்தார்.

'முரட்டுத்தனமாக ஓடுகின்றான், முரட்டுத்தனமான மிருகம்போல சளைக்காமல் ஓடுகின்றான்' என்பதாக பாவித்து, அவனை 'பிரேகு நாட்டின் மிருகம்' (Beast of Prague) என்ற ஒரு பட்டப் பெயரிட்டு விளையாட்டுப் பத்திரிக்கை ஆசிரியர்கள் அவ்வப்போது தங்கள் எழுத்துக் களில் கிண்டல் செய்தார்கள்.

அப்படி என்ன விசித்திரமாக அந்த வீரன் ஓடினான் என்றால், அது இப்படித்தான் அமைந்திருந்தது. அந்த வீரன் ஓடும்போது உடலில், அங்கங்களில் ஒருவித குலுக்கல் இருக்கும். கால்கள் இரண்டும் பின்னிக்கொள்வது போல இயங்கும். காற்றுத் துருத்தியிலிருந்து வரும் காற்றின் வேகத்தைப் போல பெருமூச்சு இருக்கும். ஒவ்வொரு காலடியையும் (Step) கஷ்டப்பட்டு எடுத்து வைப்பது போன்ற முகத்தோற்றம் இருக்கும்.

இன்னும் சொல்லப் போனால், கழுத்திலே முடிச்சு விழுந்தது போல, கழுத்தை இறுக்கித் தொங்கப் போட்டுக் கொண்டு ஓடுவது, நெஞ்சிலே கத்தியால் குத்தப்பட்டு உயிருக்குப் பயந்து ஓடுகின்ற மனிதன் போல் அவன் அமைந்திருந்தது.

இப்படி ஒரு விதமான உடலமைப்பையும் ஓட்ட அமைப்பையும் கொண்டிருந்த ஒரு வீரன், ஒலிம்பிக் பந்தயங் களிலே செய்த சாதனைகளைப் பார்த்தால் இப்படியும், நடக்க முடியுமா என்று நாம் வியந்து போகிறோம். 'மனிதன் முயன்றால் முடியாததும் உண்டோ' என்று கூறுகின்ற மொழிக்கு இந்த மனிதன் எவ்வளவு முன் உதாரணமாகத் திகழ்கிறான் என்று தெளிந்து, 'நாமும் பின்பற்றினால் என்ன!' என்னும்ஓர் துணிவினையும்முடிவினையும்கூடவே பெறுகின்றோம்

1948 ஆம் ஆண்டு இலண்டனில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் 10,000 மீட்டர் ஓட்டத்தில் தங்கப்பதக் கத்தையும், 5,000 மீட்டர் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கத்தை

யும் பெற்று, செக்கோசுலோவோகியா நாட்டிலிருந்து ஒரு வீரன் உதயமாகியிருக்கிறான் என்பதை உலகுக்கு உணர்த்தி விட்டு, நான்காண்டுகள் கழித்து ஹெல்சிங்கியில் 1952ல் நடைபெறுகின்ற ஒலிம்பிக் பந்தயத்திற்கு வந்தான். அப்பொழுது அந்த வீரன் 29 வயது இளைஞனாக இருந்தான்.

முதல் ஓட்டப்போட்டி 10,000 மீட்டர் தூரம். உலகிலிருந்து வந்த பல சிறந்த வீரர்களிடையே நடந்த கடும் போட்டியில் 320 கெஜ தூரம் முன்னால் ஓடிவந்து ஒலிம்பிக் சாதனையை நிகழ்த்தி, தங்கப்பதக்கத்தை வென்றான்.

அடுத்த போட்டி 5000 மீட்டர்தூரம். அந்தப் போட்டியிலும் இரண்டாவதாக வந்த வீரனுக்கு நான்கு கெஜ தூரம் முன்னால் ஓடிவந்து, புதிய சாதனையை ஏற்படுத்தினான். இத்துடன் அவன் மனம் சமாதானம் அடைந்து விடவில்லை. மூன்றாவது போட்டியிலும் கலந்து கொள்ளப் போகிறேன் என்று அறிவித்தும் விட்டான்.

அது தான் மிகவும் கொடுமையான தன்மை வாய்ந்த போட்டியான மாரதான் ஓட்டப் போட்டியாகும். 26 மைல் 385 கெஜதூரம் ஓடும் போட்டியாகும். இதுவரை ஓடிப் பழக்கமில்லாத போட்டியில் கலந்துகொள்வதாக அறிவித்து விட்டு, 52 வீரர்களில் ஒருவனாக வந்தும் நின்றாகிவிட்டது. மேடு பள்ளம் நிறைந்த சாலைகளில் ஓடக்கூடிய ஓட்டம் அது. முதலும் முடிவும் ஒலிம்பிக் மைதானத்தில் இருக்கும், அந்தப் போட்டியையும் மிகவும் சர்வசாதாரணமாக ஓடி முடித்தபோது நிகழ்த்திய ஒலிம்பிக் சாதனையானது முன்பு இருந்ததை விட 6 நிமிடங்கள் 16 விநாடிகள் குறைவாக இருந்தது தான் சுவையான குறிப்பாகும் அதிலும் விசேஷக் குறிப்பானது, ஓடி முடித்து ஓய்வெடுத்து, அவன் ஆப்பிள் தின்று கொண்டிருக்கும் போது இரண்டாவதாக வரும் வீரன் மைதானத்திற்குள் நுழைந்தான்.

ஏழு நாட்களுக்குள் மூன்று கடுமையான போட்டிகளில் பங்கு பெற்று உலக சாதனைகள் நிகழ்த்திய வீரனது பெயர்

எமில் செட்டபக் (Emil Zatopek) என்பதாகும், அழகாக ஓடத் தெரியாத அந்த வீரன், ஆர்வத்துடன் பந்தயங்களைப் பார்க்க வந்த அத்தனை பார்வையாளர்களையும் கவர்ந்து கொண்டான். மூன்று தங்கப் பதக்கங்களை வென்று, மூன்று ஒலிம்பிக் சாதனைகளை உருவாக்கி, மாபெரும் வெற்றி வீரனாக திகழ்ந்தான்.

இத்தகைய ஆற்றல் அந்த வீரனுக்கு எப்படி வந்தது என்று அவன் வாழ்க்கைக் குறிப்பினை ஆராய்ந்தால், நாம் ஆச்சரியத்தில் ஆழ்ந்து போகிறோம். ஆமாம்! தொடக்கத்தில் இருந்தே கற்றுத்தர யாரும் இல்லாததால் தானே தனியாக ஓடப் பழகிக்கொண்டான், தானே தன்னை தயார் செய்து கொண்டான். தானே தன்னைத் தகுதியாக்கிக் கொண்டான் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

'ஒரு காரியத்தைத் தொடேன், தொட்டு விட்டால், எக் காரணத்தைக் கொண்டும் விடேன், என்று அவன் மன உறுதியுடையவனாக அல்லவா விளங்கியிருக்கிறான்! 'தீய பழக் கங்களை மனதாலும் தொடேன், திறமைகளை வளர்க்கும் பண்புகளை கனவிலும் விடேன்' என்று திண்மை நிறைந்த நெஞ்சினனாய் திகழ்ந்தான். அவ்வாறு விடாமுயற்சியில் விடி வெள்ளியாய் விளங்கிய எமில் செட்டபக், அனுதினமும் செய்த பயிற்சிமுறையின் பட்டியலைப்பார்த்தால், இப்படியும் ஒரு வீரனா என்று நாம் வியக்கிறோம். விரிந்த விழிகளுடன், மூடாத வாயுடன் விழிக்கிறோம். ஆமாம்! 'மனித எஞ்சின்' என்று பாராட்டப்பட்ட வீரனல்லவா அவன்!

தினமும் செய்கின்ற, ஓடிப் பழகுகின்ற பயிற்சி முறை இது தான்.

200 மீட்டர் தூரத்தை 5 முறை ஓடுதல்.

400 மீட்டர் தூராத்தை 60 முறை ஓடுதல்.

200 மீட்டர் தூரத்தை 5 முறை மீண்டும் ஓடுதல்.

பிறகு இதற்கிடையில் நின்று ஓய்வு எடுத்துக் கொள் ளாமல் 200 மீட்டர் தூரத்தை மெதுவாக ஓடிக் கொண்டு இருத்தல் என்பது தான் அன்றாடப்பயிற்சியாகும்.

மனதால் நினைக்கும் பொழுது எளிது என்றுதான் தோன்றும். செயலால் படும் பொழுது தான் அந்தவேதனையும் சோதனையும் புரியும். அத்தகைய அரிய முயற்சியை 'விடேன்' என்று தொடர்ந்து, தன்னையே தகுதியுள்ளவனாக மாற்றிக் கொண்டு, இரண்டு ஒலிம்பிக் போட்டிகளில் அவன் தொடர்ந்துவெற்றிபெற்றான். அற்புதம் செய்த ஆற்றல் மிகு வீரன் எமில் செட்டபக்கின் மனைவி அதே ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான, வேலெறியும் போட்டியில் முதலாவதாக வந்து தங்கப்பதக்கம் பெற்று, உலகத்தையே வியப்பில் ஆழ்த்தினாள்.

தங்கப் பதக்கம் பெற்ற தங்க நிகர் தம்பதியர்களை உலகம் இன்றும் வாழ்த்துகிறது. நான்கு தங்கப் பதக்கங்களை கொண்டு சென்ற தம்பதியரின் திறமையை அறிந்து இன்று நாமும் வாழ்த்துகிறோம்.

# 10. தொட்டதும் தொடர்ந்ததும்

'ஏழடி உயரமா! எப்படித் தாண்ட முடியும்? இது ஒரு உலக அதிசயமே' என்று கேட்டவர்கள் கேள்விக் குறியாக உடலால் வளைந்து, தங்களையே நம்ப முடியாமல் உள்ளத்தால் நெளிந்தார்கள். அந்த 19 வயது இளைஞன், 'ஆமாம், உண்மைதான்,' என்று பதில் தருவது போல, உயரத் தாண்டிக் குதித்து ஒப்பற்ற உலக சாதனையை நிகழ்த்தினான்.

'ஏதோ அதிர்ஷ்டத்தால் அவன் ஏழடி உயரத்தைத் தாண்டிக் குதித்து விட்டான்' என்று எவர் புகழையும் பொறுத்துக் கொள்ள முடியாத ஜென்மங்கள் புலம்பும் என்று அவன் எண்ணினானோ என்னவோ, அவன் 7 அடி உயரத்திற்கு மேல் 37 முறை தாண்டிக் காட்டினான். அத்துடன் நில்லாமல், 7 அடி $3\frac{3}{4}$ அங்குலம் உலக சாதனை யென்று அவன் பெயரோடும் புகழோடும் சாதனை பொறிக் கப்பட்டிருந்தது.

இந்த இனிய நேரத்தில் தான் ஒலிம்பிக் பந்தயங்கள் 17 வது தடவையாக ரோம் நகரத்தில் நடைபெறுவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. உலக சாதனை நிகழ்த்திய வீரன், ஒலிம்பிக் வீரனாக வரவேண்டுமென்று அவன் விரும்பியது

போலவே அவன் தாயகமான அமெரிக்காவும் விரும்பி நின்றது.

போட்டிகளில் ஒன்றான உயரத் தாண்டும் போட்டியும் (HIGH JUMP) தொடங்கியது. 'அமெரிக்க நாட்டின் பாஸ்டன் பல்கலைக் கழக மாணவ வீரனான ஜான் தாமஸ் தான் வெற்றி பெறுவான், அவன் தானே ஏழு அடி உயரத்தை முதலில் தாண்டியவன், இது வரை யாருமே ஏழடிக்கு வந்ததில்லையே' என்று சந்தர்ப்ப சூழ்நிலைகளை அலசி ஆராய்ந்து, கூட்டிக் கழித்து, தங்கள் முடிவு நிஜமாக வேண்டுமென்று, நெருக்கும் உணர்ச்சிகளுக்கிடையே நெருக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தனர். ஆமாம்! அற்புத போட்டியைக் காண 70,000 பார்வையாளர்கள் அமர்ந்திருந்திருந்தனர் என்றால் பாருங்களேன்!

போட்டியில் உயரம் ஏற ஏற, போட்டியாளர்கள் குறைந்து கொண்டே வந்தனர். இறுதியிலே மூன்று பேர் மட்டுமே இருக்கும் பொழுது, 7 அடி 1 அங்குல உயரத்தில் குறுக்குக் குச்சி வைக்கப்பட்டது. இறுதி மூன்று வீரர்களில் ஜான்தாமஸ், அமெரிக்கன். இரண்டு பேர் ரஷ்யர்கள். அந்த இரண்டு பேரும் இதற்கு முன் ஏழடி உயரத்தை தாண்டியதே இல்லை. இங்கு 7 அடி 1 அங்குல உயரத்தைத் தாண்டி விட்டிருந்தது, பார்வையாளர்களுக்கிடையே மிகுந்த பரபரப்பை உண்டு பண்ணியிருந்தது. இதில் யார் வெல்வார் என்று தான் எதிர்பார்த்து இருந்தனர்.

அந்த மூன்று பேரிலும் கடைசியாகத் தாண்டும் வாய்ப்பு ஜான் தாமசுக்குக் கிடைத்திருந்தது. உலக வெற்றி வீரன் தாமசின் கண் முன்னாலே, அந்த இரண்டு பேரும் 7 அடி 1 அங்குலத்தைத் தாண்டியது என்னவோ போலிருந்தது. லட்சக்கணக்கான கைகள் படபடவென்று தட்டி ஆரவாரம் செய்தது தாமசின் நெஞ்சக் கதவையும் படபடவென்று தட்டியது போன்ற உணர்வு— தைரியத்திற்குப் பதிலாக தளர்ச்சியைக் கொடுத்தது.

37 முறை அந்த உயரத்தைத் தாண்டிய ஆற்றல் மிகு வீரன் நெஞ்சில், அச்சமும் அதிர்ச்சியும் புகுந்து கொண்டு கால்களைத் தள்ளாடச் செய்தன. முதல் வாய்ப்பில் தாண்ட முடியாது வீழ்ந்தான் தாமஸ். இரண்டாம் முறையும் வீழ்ந்தான். அடக்கி வைத்திருந்த ஆற்றலையும், ஆத்திரத்தையும், சேர்த்துக் கொண்டு தாண்டியபோதும், பாவம், அவனால் முடியவில்லை. உலக மாவீரன், புதிய சாதனையைப் பொறித்திருந்த பெரும் வீரன், தங்கப் பதக்கம் பெறும் தகுதியைஇழந்தான். மூன்றும்இடத்தைப்பெற்று,வெங்கலப் பதக்கம் பெறும் நிலையில், விம்மிக் கொண்டே அவ்விடத்தை விட்டு வெளியேறினான்.

தாங்க முடியாத அவமானத்தால், தான் எதிர்பார்த்திராத தோல்விச் சுமையால், தலைகுனிந்தவாறு சென்றான் தாமஸ். 'ஆற்றல் இருந்தது. அனுபவம் போதவில்லை' என்று வல்லுநர்கள் அவனைப் பற்றி விமரிசித்தனர். அனுபவத்தில் முதிர்ச்சியடையாத தாமஸ், 1964-ம் ஆண்டு டோக்கியோவிற்கும் பங்குபெறச்சென்றான்.

தோல்வித் துயரம் அங்கேயும் தொடர்ந்தது. துணிவும் திறமும் தொடர்ந்து கைவரப் பெறாத காரணத்தால், இரண்டாம் இடத்திற்கு வந்து வெள்ளிப் பதக்கத்தைத் தான் அடைய முடிந்தது. ஆனால், 1960ம் ஆண்டு இரண்டு ரஷ்யர்களில் ஒருவனாக இருந்த வேலரி புரூமல் (Valery Brumel), இரண்டாம் இடத்தை வென்று, 1964ம் ஆண்டு நடந்த போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றான். ஆமாம்! அவனும் சரித்திரநாயகனாக மிளிர்ந்து விட்டான்.

தைரிய புருஷனாக விளங்கிய புரூமல் 7 அடி 1¾ அங்குலம் தாண்டி ஒலிம்பிக் சாதனையைப் பொறித்தான். தொடர்ந்தாற் போல் தைரியத்தை இழந்த தாமஸ், அதே உயரம் தாண்டிய போதிலும், இரண்டாவது இடத்தையே பெற முடிந்தது.

தொட்ட காரியத்தைத் துணிச்சலுடன் தொடர்ந்த

புருமல் தோல்வியைக் கண்டு தளரவில்லை. தலைகுனியவில்லை. மாருக, துணிவை வளர்த்துக் கொண்டான். போட்டியில் அஞ்சா நெஞ்சத்தை அவன் மிகுத்துக் கொண்டான்.

நீளத்தாண்டும் போட்டியில் கலந்து கொள்ள விரும்பிய புருமல், தாண்டும் வீரர்களின் ஆற்றலைப் பார்த்து, விலகி வந்து, உயரத்தாண்டும் போட்டியில் பயிற்சி பெற விரும்பினுன். தொடக்கமே 4 அடி 9 அங்குலம் என்றதால், பயிற்சியாளராலே தவிர்க்கப்பட்டும், அவன் தன்னுடைய துணிவினுல், உழைப்பைத் தொடர்ந்தான். 18 வயதுக்குள்ளாக 7 அடி உயரம் தாண்டினுன். 20ம் வயதில் 7 அடி $5\frac{3}{4}$ அங்குலம் தாண்டினுன் என்ருல் அவனது உழைப்பையும் உற்சாகப் பாங்கினையும் தான் நாம் காணவேண்டும். 6 அடி உயரமுள்ள புருமல் 7 அடி $5\frac{3}{4}$ அங்குலம் தாண்டினுன் என்ருல், அவன் தொட்ட காரியத்தைத் தொடர்ந்து பழகினுன், துணிந்து திறம் பெற்ருன், பெற்ற திறத்தைப்பெருமை தரும் வழியில் ஈடுபடுத்திஞன், பெரும் புகழ் பெற்ருன் என்பதே பொருளாகும்.

திறமிருந்தும், துணிச்சலும் தைரியமும் குறைந்த தாமஸ், வெற்றி வாய்ப்பை இழந்தான். உள்ள திறத்தை உற்ற நேரத்தில் பயன் படுத்தி, உலகப் புகழ் பெற்ருன் புருமல். திறமில்லாத தைரியமும், தைரியம் இல்லாத திறமும் தோல்வியையே அடையும் என்பதற்கு அமெரிக்க வீரன் தாமசும், ரஷ்ய வீரன் புருமலும் நமக்கு நல்ல எடுத்துக்காட்டாய் விளங்குகின்ருர்கள்.

ஆகவே, திறத்தை வளர்ப்போம், தேவையான தைரியத்தை நிறைப்போம். அதனை தூய வழியில், நேரிய செயலில் பயன்படுத்தி, புகழ் பெறுவோம். பிறந்ததன் பயன் புகழார்ந்த, நலமார்ந்த வாழ்வு வாழத்தானே !

# 11. பெருந்தன்மையும் பேராண்மையும்!

வரலாற்றில் இடம் பெற்று விட்டோம் என்று வான ளாவிய மகிழ்ச்சியில் திளைத்த வீரர்கள் நால்வரும், ஒருவரை ஒருவர் தேடி ஓடிவந்தனர். வியர்வைக் குளமாக ஈரம் படிந்த தங்களது தேகத்தையும் பாராது, ஆரத்தழுவி, தங்களது அளவிடற்கரிய ஆனந்தத்தை வெளிப்படுத்திக் கொண்டனர்.

வீரப் புன்னகை, வெற்றிப்புன்னகை அவர்களுடைய திருமுகங்களிலே திருவிழாக்கோலமாகத் திகழ்ந்தது. திருஷ்டி பட்டுவிடுமோ என்கிற அளவுக்கு அவர்களது ஆனந்தம் கொடி கட்டிப் பறந்த நேரத்திலே, திடீரென்று இடிவந்து வீழ்ந்தது போல, அவர்களது இதயத்தைத் தாக்கிய துயரச் செய்தி கேட்டுத் துடித்தனர். துவண்டனர். ஒருவரை ஒருவர் பார்த்து, என்ன செய்வதென்று தெரியாது திகைத்தனர். மலைத்தனர். ஊமை நெஞ்சங்கள் ஓங்காரமாக வீழும் அருவி போல சோகப் பெருமூச்சை இறைத்துவிட்டன.

விளையாட்டுப் பந்தயங்களிலே இப்படியும் நிகழுமா! 83,000 பார்வையாளர்களுக்கு மேல், விழித்த விழியை இமைக்காது, யார் ஜெயிப்பார்கள் என்று கருத்தூன்றிப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே, இப்படியா முடிவெடுப்பார்கள்? இப்படியா ஏமாற்றுவார்கள்? தங்கள்

நாட்டு வீரர்கள் வெல்ல வேண்டும், தங்கப் பதக்கம் பெறவேண்டும் என்பதற்காக, இப்படியா தகிடுதத்தம் செய்வார்கள், தன்மானம் இல்லாமல், தலைகுனியும் இழிவுச் செயலை புரிவார்கள்' என்று அந்த நான்கு வீரார்களுடைய மனம் மட்டுமல்ல, அமெரிக்காவிலிருந்து, வந்த வீரர்கள், அதிகாரிகளிடையேயும் பொங்குமாங்கடலாக, எண்ண அலைகள் புயலலையாக பாய்ந்து எழுந்தன!

'இங்கிலாந்து அதிகாரிகள், இப்படியும் செய்வார்கள் என்று தெரியாமல் போயிற்றே' என்று அமெரிக்கர்களும், மற்ற நாட்டினரும் இனம் புரியாத கவலையில் மூழ்கிக் கொண்டிருந்தபோது, 6 கெஜ தூரம் முன்னதாக ஓடி முடித்த அமெரிக்கநாட்டு வீரர்களின் பெயர்கள் ஏன் அறிவிக்கப்படவில்லை என்ற 'கேள்வி மழை, பார்வையாளர்களிடையே தூறலாகத் தொடங்கி, புயல் மழையாகப் பெய்து சூழ்நிலையை நனைத்தது.

அந்த பார்வைப் புயலுக்கும் சொல் மழைக்கும் இடையே தங்கப் பதக்கங்கள் பரிசளிக்கின்ற விழாக் காட்சியும் நடைபெற்றது. முதலாவதாக இருக்க வேண்டிய அமெரிக்கர்கள், தொடரோட்டமாகிய (Relay Race) அந்த ஓட்டத்தில் எல்லையைக் கடந்து குறுந்தடியை (Baton) மாற்றிக் கொண்டனர் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக்கப்பட்டு, போட்டியிலிருந்தே விலக்கப்பட்டனர். வெற்றி பெற்றும் அத்தகுதியிலிருந்து நீக்கப்பட்டு விட்டனர்.

இரண்டாவதாக வந்த இங்கிலாந்து நாட்டுக் குழு முதலாவதாக வந்தது என்று அறிவிக்கப்பட்ட செய்திதான் இடி விழும் செய்தியாக அமெரிக்கர்களைத் தாக்கியது. ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் இடமோ இங்கிலாந்து நாட்டிலுள்ள இலண்டன் மாநகரம். ஒலிம்பிக் பந்தயங்களை நடத்தும் பேறு பெற்று நடத்திய இங்கிலாந்து நாட்டின் அதிகாரி ஒருவர், எல்லை மாறிவிட்டார்கள் இவர்கள் என்று குற்றத்தகவல் கொடுத்தவுடன்தான், ஆர்ப்பாட்டமாக

வெற்றி பெற்றும் கூட, அமெரிக்கர்கள். தோற்றூர்கள், அல்ல அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்.

இங்கிலாந்து நாட்டிலே, இங்கிலாந்து அதிகாரிகளால், இந்த மாதிரி முடிவு எடுக்கப்பட்டு, இரண்டாவதாக வந்த இங்கிலாந்து வீரர்கள் நால்வருக்கும் ஆளுக்கு ஒரு தங்கப் பதக்கம் என்று பரிசாக வழங்கினூர்கள். மூன்றுவதாக வந்த இத்தாலிய வீரர்கள் இரண்டாவது இடத்திற்குக் கொண்டு வரப்பட்டு வெள்ளிப் பதக்கங்களையும், நான்காவதாக ஓடிய ஹங்கேரி நாட்டினர், மூன்றுவதற்குரிய வெங்கலப் பதக்கங் களையும் பெற்றுக் கொள்ள பரிசளிப்பு விழா இனிதே முடிந் தது. மகிழ்ச்சியில் திளைத்த அமெரிக்க வீரர்கள், முகங்கள் இப்பொழுது துக்கத்தினுல் மேலும் கருமையாகிக் கொண்டி ருந்தன.

'முடிவு தெரிந்தாகி விட்டதே' என்று முணுமுணுத்தவாறு இந்த பிரச்சினையை முடித்து விட்டுச் செல்ல அமெரிக்க அதி காரிகள் மனம் ஒப்பவில்லை. அதை ஒலிம்பிக் நீதிக் குழுவின் முன், எதிர்ப்பு மனுவை அளித்து, நீதிதருமாறு வேண்டிக் கொண்டனர். நீதிக் குழுவும் தன் கடமைக் கரத்தை கருணை யுடன் உயர்த்தி, ஆராயத் தொடங்கியது.

ஓட்டப்பந்தய நிகழ்ச்சியினை சினிமா படம்போல எடுத் திருந்ததைக் கொண்டு வந்து போட்டுப் பார்த்தார்கள். அதிலே எந்தவிதமான தவறையும் அமெரிக்க ஓட்டக்காரர் கள் செய்யவில்லை என்பது புலனுயிற்று. சரியாகக்குறுந்தடி மாற்றி கொண்ட விதத்தை, தவருகத் தகவல் கொடுத்திருக் கிறுர் அதிகாரி ஒருவர் என்பதை நீதிக்குழு ஏற்றுக் கொண் டது. அந்த சினிமாப் படம், லட்சக்கணக்கான மக்கள் முன்னே போட்டுக் காட்டிய போது, எல்லோரும் ஏகோ பித்த அளவில், தவறு நடக்கவில்லை. செய்யாத தவறுக்குத், தண்டனை ஏன்? என்று பேசியவாறு தங்கள் கருத்துக்களையும் தெரிவித்தனர்.

இரண்டு நாட்கள் கடுமையாக பிரச்சினையை பரிசீலித்து, 'அமெரிக்க வீரர்கள் தான் வென்றனர்' என்ற தீர்ப்பை,

நீதிக்குழு தந்தது. நடந்துபோன நிலைமைக்காக, இங்கிலாந்து அதிகாரிகள் வருத்தம் தெரிவித்தனர். அமெரிக்க நாட்டு தேசிய கீதம் பாடப் பெற்றது. அமெரிக்க வீரர்கள் தங்கப் பதக்கங்கள் பெற்றனர்.

ஆமாம்! இங்கிலாந்து நாட்டு வீரர்களுக்குத் தந்த தங்கப்பதக்கங்களைத் திரும்பப்பெற்று, அமெரிக்க வீரர்களுக்கு அளித்தனர். இங்கிலாந்து வீரர்களுக்கு இரண்டாம் பரிசும், இத்தாலியவீரர்களுக்கு மூன்றும் பரிசும் வழங்க, மனத்தாங்கல் மாறி, பரிசளிப்பு நடைபெற்றது.

கடமையை சரிவர புரியாது, அவசர முடிவெடுத்த அதிகாரி ஒருவரால், அகில உலகத்தினிடையே குழப்பம் ஏற்பட்டாலும், விளையாட்டுத் துறையில் ஈடுபட்டவர்களுக்கிடையேஉலவும் பெருந்தன்மை, அந்த பிரச்சினையைஎளிதாக விட்டுக்கொடுத்து சரிசெய்து, சகோதரத்துவத்தையும் அந்த நீதிக்கு முன்னே அனைவரும் சமம் என்ற கொள்கையையும் நிரூபித்துக் காட்டியது.

தான் செய்த தவறை ஏற்றுக் கொள்ளும் பெருந்தன்மை, அந்தத் தவறினைத் திருத்திக் கொண்டு, அடுத்தவர்க்கு உதவிச் செய்யும் பேராண்மை இரண்டையும் ஏக காலத்தில் செய்து காட்டிய ஆங்கிலேய அதிகாரிகளின் செம்மாந்த இதயத்தை அனைவரும் பாராட்டினர்.

உணர்ச்சிப் பெருக்கெடுத்தோடும் ஒலிம்பிக் பந்தய நிகழ்ச்சிகளில் இது போல சம்பவங்கள் எப்படியோ இடம் பெற்று விட்டாலும், அறிவு உணர்வோடு அமைதியாக சீர் தூக்கி ஆராய்ந்து, அதைப் பண்புடன் முடிவெடுக்கின்ற பெருந்தன்மை, பேராண்மையின் காரணமாகத்தான், விளையாட்டுத் துறைக்கு இவ்வளவு சீரும் சிறப்பும் கிடைக்கிறது. அதனால்தான், அதில் பங்கு பெறுகின்ற வீரர்களும் வீராங்கனைகளும், அதிகாரிகளும், நடத்துனர்களும் ஆன்ற புகழையும் அரிய மதிப்பையும் பெற்று உலா வருகின்றனர்.

பெருந்தன்மை என்பது உடனே ஒருவருக்கு உதித்து வந்து விடும் பண்பு அல்ல. கொஞ்சங்கொஞ்சமாக சிறு துளி பெருவெள்ளம் போல, அவ்வப்போது பெறும் அனுபவங் களின் மூலமாக மலரும் அறிவினால் உண்டாவதாகும். அத்தகைய அனுபவங்களையும் அறிவினையும் விளையாட்டுத் துறை வழங்குகிறது என்கின்ற உண்மையைத்தான் இந் நிகழ்ச்சி நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

பெருமை தரும் பெருந்தன்மையை உருவாக்கித் தந்து உயர்த்துகின்ற பேராண்மை மனம் பெறுவோம். அதுவே நம்மை மற்ற மனிதர்களிடமிருந்து உயர்த்திக் காட்டும் என்பதை உணர்ந்து, 'உண்மையை மதிப்போம். விதிவழி நடப்போம். நீதியைப்போற்றும் நெஞ்சத்தை வளர்ப்போம்' என்று இன்றே உறுதி எடுத்துக் கொள்வோமாக!

# 12. நாமென்ன நாட்டுக்கு செய்தோம்!

வளைகோல் பந்தாட்டமா!... இந்திய நாட்டுவீரர் மேஜர் தியான்சந்த். கால் பந்தாட்டமா....! பிரேசில் நாட்டு வீரர் பீலி. டென்னிஸ் ஆட்டமா....! ஸ்வீடன் தேசத்து வீரர் பேஜான்பர்க். மாரதான் ஓட்டமா....! எத்தியோப்பியா நாட்டு வீரர் அபீப்பிகிலா. நெடுந்தூர ஓட்டமா...!செக்கோசுலோ வோகியா நாட்டு வீரர் எமில் செட்டபெக்.

இப்படி ஒவ்வொரு ஆட்டத்திற்கும் ஓட்டத்திற்கும் உலக வீரர்களுக்கிடையே ஒருவர் என்று புகழ் மிகுந்த நட்சத்திரமாக விளங்கும் வீராதி வீரர்களுக்கு இடையிலே இன்று ஓர் புதிய வீரர், விரைவாக ஓடும் ஆட்டக்காரர் ஒருவர் உலக அரங்கிலே உதயமாகி இருக்கிறார்.

22 வயது நிரம்பிய இளைஞன், பொறியியல் வல்லுநர் ஒருவரின் நான்கு மக்களில் ஒருவன், பொருளாதாரப் பாடத்திலே பட்டம் பெற்ற மாணவன், 41 நாட்களுக்குள் எந்த வீரனும் சாதிக்காத சாதனை ஒன்றை சாதித்து, புதிய நேர சாதனையைப் பொறித்து, உலக விளையாட்டு அரங்கை, ரசிகப் பெருமக்களை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறான்.

"விரைவாக ஓடக் கூடியவர்கள், வல்லமை பெற்றவர்கள், இயற்கை அளித்த இனிய பரிசு இவர்கள் உடலமைப்பு, என்று எல்லாரும் ஏகோபித்த வண்ணம் ஏற்றுக் கொண்ட

உண்மைக்கு உதாரணமாகத் திகழ்பவர்கள் நீக்ரோ வீரர்கள்'' என்ற ஓர் நிதர்சனமான உண்மை நிலையை மாற்றி அமைத்து, 'வெள்ளை இனத்தவராலும் வீறு பெற்று ஓடிட முடியும்' என்று புதிய சரித்திரம் படைத்துக் காட்டியிருக்கிறான் என்றால், அவன் உழைப்பும் லட்சியமும் எப்படி அமைந்திருக்கும்! சற்று சிந்தித்துப் பாருங்கள்.

1979ம்ஆண்டு ஜூலை 15ந் தேதியிலிருந்துஆகஸ்டு மாதம் 14ம் தேதிக்குள்ளாக மூன்று ஓட்ட நிகழ்ச்சிகளில் உலக சாதனை. 800 மீட்டர் ஓட்டம், 1500 மீட்டர், 1600 மீட்டர் தூரமான ஒரு மைல் ஓட்டம், இத்தனையிலும் சாதனை பொறித்து இடைநிலை ஓட்டத்தில் [Middle Distance Race] இணையற்ற வீரன் என்று புகழ்பெற்ற இந்த வீரன் இங்கிலாந்து நாட்டில் ஷெப்பீல்டு எனும் இடத்தில் தோன்றியவனாவான்.

800 மீட்டர் தூரத்தை 1 நிமிடம் 42.2 வினாடிகள், 1500 மீட்டர் தூரத்தை 3 நிமிடம் 32.1 வினாடி, ஒரு மைல் தூரத்தை 3 நிமிடம் 49 வினாடிகள் என்பவைதான் இவ்வீரன் இயற்றிய உலக சாதனை நேரங்களாகும்.

ஒலிம்பிக் பந்தயங்களில் விரைவோட்டத்தில் அதிலும் குறிப்பாக 100 மீட்டர் தூரம் என்றால், அமெரிக்க நீக்ரோ வீரர்களை வெல்ல முடியும் என்ற எண்ணத்தை 1960ம் ஆண்டு மாற்றியவர் ஆர்மின் ஹேரி எனும் ஜெர்மானியர் அதற்குப்பின் வேலரி போர்சாவ் எனும் ரஷ்யர் 1972ம் ஆண்டு100மீ, 200 மீ ஓட்டங்களில் தங்கப் பதக்கம் பெற்றார். இவ்வாறு, ஓட்டப்பந்தயங்கள் என்றாலே அமெரிக்க ஆப்ரிக்க நாட்டு வீரர்கள்தான் என்ற நிலையை மாற்றியமைத்து, வெற்றிக்கொடி நாட்டியபெருமைக்கு உரியவர் செபாஸ்டியன் கோ [Sebastian Coe] எனும் இங்கிலாந்து இளைஞன், தன்னைத் தோற்றுவித்த தாயகத்திற்குத் தன்னிகரில்லாத பெருமையை வாரி வழங்கியிருக்கிறான்.

அமெரிக்காவிலே ஆர்ப்பாட்டமான வெற்றியைப்பெற்று ஆரவாரித்த ரசிகப் பெருமக்களின் அளவிலா பாராட்டுக்களை

ஏற்று, அமெரிக்க நாட்டிலிருந்து, தன் நகரமான லண்டன் வர பயணமானான். அப்பொழுது அவன் செய்த உலக சாதனையைப் பாராட்டி ஒரு ரசிகர், தங்கச்செயின் கொண்ட கைக்கெடிகாரம் ஒன்றைப் பரிசளித்துப் பாராட்டி திருப்தியடைந்து போய்விட்டார்.

ஆயிரமாயிரம் பாராட்டுப் பரிசுகளில் இதுவும் ஒன்று என்று மறந்துபோன செபாஸ்டியன், விமானமேறி, லண்டன் வந்து இறங்கிய பொழுதுதான் விழிக்கவும் மிரளவும் நேர்ந்தது. பையுடன் வந்த வீரனை வழிமறித்துக் கொண்டார்கள் விமான நிலைய சுங்க அதிகாரிகள். சோதனை போடத் தொடங்கினார்கள்.

தங்கச் செயினைப் பார்த்ததும், தாவிக் குதிக்கத் தொடங்கினார் ஓர் அதிகாரி. எங்கே, என்ன, எப்படி என்றவாறு பல்வேறு விதமான தோரணையில் கேள்விமாரி பொழியத் தொடங்கினார். பின்னர் பயப்படுத்தத் தொடங்கினார். அபராதம் கட்டவேண்டும் என்று அச்சுறுத்தினார். ஆணையிட்டார்.

ஒன்றும் புரியாமல் செபாஸ்டியன் சிலையாகி விட்டான். கடத்தல் என்ற பாணியில் கேள்வி கேட்டால் எப்படி! வரி என்று அதிகப் பணம் என்றாலும், கையிலே பணமோ இல்லை. இந்த வீரனின் முகத்தைப் பார்த்தும் அந்த அதிகாரிகளுக்கு ஒன்றும் தெரியவில்லை. பாஸ்போர்ட்டைப் பார்த்தும் பெயரும் தெரியவில்லை. இந்த இக்கட்டான சூழ்நிலையில் அனல் மேல் நிற்பவனைப்போல, அகில உலகப் புகழ்பெற்ற வீரன் திண்டாடித் திகைத்துப்போய் நின்றபொழுது....இன்னொரு அதிகாரி வந்தார்.

செபாஸ்டியனைப் பார்த்தார். சிவந்த முகத்தில் சந்தோஷம் மலர்ந்து வந்தது. அச்சுறுத்திய அதிகாரியைப் பார்த்து ஆத்திரம் அடைத்தார். இந்தத் தங்கச் செயினுக்காகவா இந்த நிலை....

'இந்த வீரன் பிரிட்டனுக்காக சாதித்திருக்கும் சாதனையான பெரும்புகழைவிட யார் செய்திருக்கிறார்...' என்று கூறிக்கொண்டே அந்த இக்கட்டான நிலையிலிருந்து விடுவித்தார். "பத்து லட்சம் ரூபாய் செலவு செய்தாலும் கூட, நம் நாட்டுக்கு இப்படி ஓர் புகழை ஈட்டியிருக்க முடியாது. உங்கள் சேவை உன்னதமான சேவை, உயர்ந்த சேவை' என்று செபாஸ்டியனைப் பாராட்டி, கை குலுக்கி தன் அன்பினை, மரியாதையை வெளிப்படுத்தினார்.

'மூன்று நிகழ்ச்சிகளில் மூன்று உலக சாதனைகள் செய்திருக்கிறேன். ஆனால் மாஸ்கோ ஒலிம்பிக் நடக்கவில்லை. நான் எதுவும் தங்கப்பதக்கம் பெறவில்லை' என்று பதில் கூறினான் செபாஸ்டியன்! பணிவுள்ள இளைஞன், தன் சாதனை இன்னும் பூரணத்துவம் அடையவில்லை என்று தன் பண்புள்ளத்தை இவ்வாறு வெளிப்படுத்திக் காட்டினான்.

மாஸ்கோ ஒலிம்பிக் 1980ம் ஆண்டில் வர இருக்கிறது. அதில் மூன்று தங்கப்பதக்கங்களை வென்று, தன் நாட்டிற்குப் பெருமை தேடித் தரவேண்டும் என்று காத்திருக்கும் மாபெரும் வீரனைப் பார்த்ததும், நமக்கு மறைந்த அமெரிக்க ஜனாதிபதி கென்னடி கூறிய வார்த்தைகள் தான் எதிரொலிக்கின்றன. 'நாட்டுக்கு நாம் என்ன செய்தோம்' என்று சிந்திக்கவேண்டும், செயல்படவேண்டும்' என்ற மொழிக்கு செபாஸ்டியன் சிறந்த உதாரணமாக அல்லவா திகழ்கிறான்

வாழ்க்கையில் ஒருமுறை வருகின்ற இளமையை, நல்ல இலட்சியத்தில் ஈடுபடுத்தினால், ஈடிலா புகழை அடைய முடியும். அதனால் தான், பிறந்த வீடும், தன்னைப்பெற்ற பெற்றோரும், நம்மைக் காத்திருக்கும் நாடும் உலக அரங்கிலே தலை நிமிர்ந்து நிற்கமுடியும் என்ற உண்மை மொழியை நமது இளைஞர்கள் என்று உணர்ந்து, உரிய முயற்சியில் ஈடுபடுகின்றார்களோ, அன்றுதான் தமிழ்நாடு சங்ககாலப் புகழை அடைய முடியும். அத்தகைய பொற்காலம் விரைவில் வர இருக்கிறது என்ற நிலையை அறிந்து, நாமும் உதவுவோம். இளைஞர்களை உற்சாகப்படுத்துவோம்.

# 13. எனக்கும் ஓர் இலட்சியம்!

வெற்றி மேடையில் ஏறி நின்றான் அந்த இளைஞன் முதல் இடத்திலா? அல்ல! மூன்றாவது இடத்தில். ஒலிம்பிக் பந்தயத்தில் முதல் இடத்தில் நின்று, தங்கப்பதக்கத்தைப் பரிசாக பெற்று, தந்தையிடம் காட்டி, தன் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள விரும்பி பங்கு பெற வந்த இளைஞனுக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

அதிர்ச்சிக்கு அதிர்ச்சி கொடுப்பது போல் அமைந்திருந்தது அவனது சொல்லும் செயலும். ஆமாம்! 'முதல் இடத்தைப் பெறத்தான் முயன்றேன். முடிந்ததோ மூன்றாவது இடத்தில்தான். என்னை வென்ற வீரன் இந்த மும்முறைத் தாண்டும் போட்டி நிகழ்ச்சியில் இரண்டு முறை ஒலிம்பிக் பந்தயங்களில் வென்று, இரண்டு தங்கப் பதக்கங்கள் வென்ற வீரன் விக்டர் சானியேவ் என்னும் ரஷ்யராயிற்றே! மூன்றாவது முறையாகவும் இந்தப் போட்டியில் வென்று, 12 ஆண்டுகளாக தனது இடத்தைத் 'தக்க' வைத்துக்கொண்டிருக்கின்றாரே' என்று அந்த இளைஞன் தன்னை வென்ற வீரனை பாராட்டினான்.

இத்தனைக்கும் அவன் தகுதி என்ன சாதாரணமானதா? 1972ம் ஆண்டுதான் அந்த இளைஞன் மும்முறை தாண்டும்

போட்டியில் பழகத் தொடங்கினான். மூன்று ஆண்டுகளுக்குள்ளே அவன் விக்டர் சானியேவ் தாண்டிய தூரத்தை விட அதிக தூரம் தாண்டி, உலக சாதனையைப்பொறித்திருந்த இளைஞன் அவன்.

1976 ம் ஆண்டிலே நடந்த ஒலிம்பிக் போட்டியில் இவனே வெற்றி பெறுவான் என்று உலகமே எதிர்பார்த்து இருந்தது. ஆமாம். ஒலிம்பிக் வெற்றி வீரன் கூட சற்று அச்சத்துடன் தான் பங்கு பெறவும் வேண்டியிருந்தது. ஏனெனில் 'கியூபா நாட்டு வீரன் பெரிஸ்டியூனஸ்; கிழக்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஜோர்க் டிரீமல், பிரேசில் நாட்டைச் சேர்ந்த புருடென்சியோ; இத்தாலி நாட்டைச்சேர்ந்த ஜென்டைல்; ருமேனியா நாட்டு கார்பூ; அமெரிக்க வீரன் பட்ஸ் ஆகிய மும்முறைத்தாண்டும் போட்டியில் உலக அரங்கிலே உன்னதமாக திகழ்ந்த அவர்களைவிட அழகாகவும், அருமையாகவும், ஆற்றலுடனும் அதிக தூரம் தாண்டக் கூடிய வீரன், என்று அகில உலகத்தாராலும் புகழ்ப்பெற்ற இந்த வீரன், ஒலிம்பிக் போட்டியில் தோற்று மூன்றும் இடத்தை அடைந்ததும், முதலில் வென்ற வீரனைப் போற்றி னான். அவனது அளப்பரிய ஆற்றலைப் பாராட்டினான்.

அடுத்து அவன் கூறியதாவது: 'எனது காலில் ஏற்பட்ட காயம், நல்ல வேளை அதிக தொந்தரவு தரவில்லை. அதைப் பற்றியே கவலையிருந்தாலும், என்னை அது தடுத்துவிடவில்லை. மூன்றாவது இடத்தை வென்று, வெங்கலப்பதக்கம் பெற்றதற் காக மகிழ்கிறேன். ஆனால், வரப்போகின்ற 1980ம் ஆண்டு மாஸ்கோவில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில், நிச்சயம் நான் வெல்வேன்' என்ற என் இலட்சியப்படி இன்னும் பயிற்சி செய்வேன், செய்வேன்' என்று நம்பிக்கை யுடன் கூறினான்.

அவனது வார்த்தைகளை அப்படியே ஆமோதித்தார் அவனது தந்தை. அவரும் இளமையில் சிறந்த விளையாட்டு வீரராகவும், 'ஜூடோ பயிற்சியாளராகவும் திகழ்ந்தவர். இன்னொரு வெற்றிப்பதக்கம் நம் வீட்டுக்கு வரப்போகின்ற

நன்றாக எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறேன்' என்று ஒன்பது குழந்தைக்குத் தந்தையான அவர் பூரிப்புடன் கூறி புளகாங்கிதம் அடைந்தார்.

ஜாவோ கார்லஸ் டி ஒலிவிரா (Joao Carlos de Oliveira) எனும் பிரேசில் நாட்டு வீர இளைஞன் ஒன்பது குழந்தைகளில் ஒருவனாகத்தான் தோன்றினான். வறுமைப் பிடியிலே சிக்கி வதங்கிக் காங்கிய அந்த ஏழையின் மகன், இளமைக்காலத்தை கல்வியில் செலவிடாமல், தன் வயிற்றைக் கழுவ, பட்டினிப் பேயிடமிருந்து தப்பிக்கொள்ள, கார்களை கழுவிக் காசு வாங்கிக் காலம் கழித்திட வேண்டியிருந்தது.

விவரம் தெரிந்தவரை அந்தப் பணியிலேயே வாழ்ந்து வறுமையை பொறுமையுடனும் விடாப்பிடியுடனும் விரட்டிக்கொண்டிருந்தான். வறுமையின் கொடுமையிலிருந்து அவனை மீட்டு மகிழவைத்தது விளையாட்டில் கொண்டிருந்த அவனுடைய உவப்பும் உற்சாகமும்தான்.

இயற்கையிலேயே உடல்திறமும் வளமும் பெற்றிருந்த அவன், தன் பணிநேரம் போக, கால்பந்தாட்டத்தை விளையாடி மகிழ்ச்சியடைந்த வண்ணமிருந்தான். காலம் அவனை வளர்த்தது. கட்டிளங்காளையாக மாறினான். கால்பந்தாட்டத்தை இன்னும் அவன் விடாமல் ஆடினான். சிறந்த வீரன் என்று அதிலும் புகழும் வண்ணம் ஆடினான். கூடைப் பந்தாட்டமும் ஆடினான். அப்படி ஆடிவந்தநாளில், உடற்கல்வி ஆசிரியர் ஒருவரின் கண்களில் அவன் பட்டு விட்டான். ராபர்டோ டி வெஸ் கான்சிலஸ் என்பது அவர் பெயர். 'ஆறடி இரண்டங்குலம் உயரம் உள்ள நீ ஏன் உயரத் தாண்டும் போட்டியில் முயற்சி செய்யக்கூடாது' என்று கேட்டுவைத்தார் அறிவுரை தந்தார், போட்டிருந்த உடைகளுடனே எளிதாக ஆறடி உயரத்தை அவன் தாண்டிக் காண்பித்தபொழுது, அவர் அயர்ந்தே போனார். அந்த நிகழ்ச்சியே அவனை திசை திருப்பிவிட்டது. ஓடுகளப் போட்டியின் பக்கம் வந்துவிட்டான்.

அவனது ஓடும் வேகம் 100 மீட்டர் தூரத்தை 10·3 வினாடிகளில் கடப்பதாக இருந்தது. இப்பொழுது 10·1 வினாடிகளில் அவன் ஓடுவதைக் கண்டால், நமது இந்திய விரைவோட்டக்காரர்கள்கூட 10·4 வினாடிகளுக்கு மேலே இருப்பதை அறியும்பொழுது நாம் எங்கேயோ தூரமாக இருப்பதுபோல் தோன்றவில்லையா!

அவன் நீளத் தாண்டும் தூரம் (Long Jump) 26 அடி 8 அங்குலம் என்ற சாதனையை அறியும் பொழுது, விரைவோட்டம், நீளத்தாண்டும் போட்டிகளில் அவன் நிகரற்றவன்தான் என்றாலும், அந்த வீரனது இலட்சியம், மும்முறைத் தாண்டும் (Triple jump) போட்டியில் வெற்றி பெறுவதில்தான் இருக்கிறது.

மும்முறைத் தாண்டலில் ஜாவோ கார்லஸ் தாண்டி இருக்கின்ற தூரம்58அடி 8¼ அங்குலமாகும். (17மீ89செ.மீ.) ஆனால் அவனுடைய இலட்சியம் 18 மீட்டர் தூரத்தைக் (59அடி) கடந்து உலக சாதனை நிகழ்த்திட வேண்டும் என்பதுதான்.

'விக்டர் சானியேவை வெல்ல முயற்சிக்கிறேன். என் இலட்சியம் இது என்று பயிற்சி செய்யும் 25 வயது இளைஞனை பிரேசில் நாட்டு வீரனை, வறுமை என் செய்யும்? வருத்துகின்ற தோல்விதான் என் செய்யும்?

முயற்சியுடையோருக்கு தெய்வமேவந்து தோள் கொடுக்கும், துணையிருக்கும் என்று பெரியோர்கள் கூறுவது பொய்யாகுமோ! அந்த இலட்சிய வீரனை நாம் தினந்தோறும் நினைப்போம். நாமும் ஓர் உயர்ந்த இலட்சியத்தை நம் முன்னே வைப்போம்.

இலட்சியத்தை நினைந்து, முனைந்து செயல்படுவோம். இலட்சியம் இல்லாதவாழ்க்கை விலங்கின் வாழ்க்கையன்றோ! ஜாவோ கார்லஸ் நமக்குத் தோன்றாத் துணையாக, இருந்து வழி காட்டட்டும், வலிமை ஊட்டட்டும்! விழிகளைத் திறக்கட்டும். வீரத்தைப் பெருக்கட்டும்: வாழ்க அவன் இலட்சியம் என்று வாழ்த்துவோம். நாமும் வழிநடப்போம்.

# 14. வாலாறு வணங்குகிறது!

தந்தை செய்தித்தாளை எடுத்துப் படிக்கத் தொடங்கிய வுடனே, பக்கத்திலே வந்து அமர்ந்து கொள்வாள் அந்தச் சிறுமி. 1928-ம் ஆண்டு அது. ஒலிம்பிக் பந்தயங்கள் ஆம்ஸ்டர்டாம் என்ற நகரில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்த நிகழ்ச்சிகளை தன் தந்தைப் படித்துக் காட்டும் பொழுது, உடனே தன் இருக்கையில் இருந்து எழுந்து நின்று கொள்வாள்.

'நானும் ஒருநாள் ஒலிம்பிக் பந்தயத்திற்கு செல்லப் போகிறேன். எல்லாப் போட்டிகளிலும் வென்று வரப் போகிறேன். எனது நாட்டுக்கு நல்ல புகழ் சேர்த்து தருவேன்' என்றெல்லாம் உணர்ச்சிமிகுதியால் பேசத் தொடங்கிவிடு வாள். அவளது தந்தைக்கோ மிக ஆச்சரியமாக இருந்தது. இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு ஆர்வம் எப்படி வந்தது என்று தெரியாமல் திகைப்பார் அவர்.

ஆறு குழந்தைகள் உள்ள குடும்பத்தில் ஆறுவது குழந் தையாகப் பிறந்த அந்த சிறுமி, 14 வயதும் நிரம்பாதவளாக இருந்தாள். 'உன் ஆசைக் கனவுகள் நிறைவேற வேண்டு மானல், நீ இன்னும் நான்காண்டுகள் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். ஏன் தெரியுமா? அப்பொழுதுதான் ஒலிம்பிக் பந்தயங்கள் மீண்டும் நடைபெறும்' என்று அவள் தந்தை சொன்ன மொழிகள் அவள் காதுகளில் அடிக்கடி ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்கும்.

"நான் உலகத்திலே இது வரை யாரும் சாதிக்காத அளவில் பெரிய வீராங்கனையாகத் திகழ வேண்டும்." இது தான் அவளது நினைவாக கனவாக, உயிர் மூச்சாக இருந்து கொண்டே இருந்தது. அதற்கான வாய்ப்பும் வசதியும் வந்தபாடில்லை. என்றாலும் எரியும் கனலாக இதயத்திலே பெருகிக்கொண்டே இருந்தது.

பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்பொழுது ஒரு நாள் மாலை வேளையில் விளையாட்டு மைதானம் நோக்கிப் போனாள். பலர் அங்கே பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள். அங்கே நீண்ட கம்பு ஒன்று கீழே கிடந்தது. அதைப் பார்த்து இது என்ன? என்று ஆச்சரியமாகக் கேட்டாள். பயிற்சி யாளர் அவள் கேட்ட ஆர்வத்தைப் பார்த்து மகிழ்ந்து, இது ஜேவலின் (வேல் கம்பு) என்றார். பிறகு இப்படித்தான் எறிய வேண்டும் என்று எறியும் முறைகளை விளக்கிக் காட்டி எறிந்தும் காட்டினார்.

விளக்கங்களை நன்றாக மனதிலே வாங்கிக்கொண்டாள் அந்த மாணவி. ஓரிருமுறை ஓடிவந்து எறியும் முயற்சி செய் தாள். பிறகு அவள் வேகமாக எறிந்தும் காட்டினாள். அதை அளந்து பார்த்த பயிற்சியாளர், 'இவ்வளவு தூரம் யாரும் இதுவரை எறிந்ததில்லையே. இந்த தூரம் தற்பொழுது குறித்து வைக்கப்பட்டிருக்கும் உலக சாதனைக்கு இணையாக இருக்கிறதே' என்று கூறி பாராட்டி னார். வியப்பினால் தன்னை மறந்த பயிற்சியாளர், அதன்பின் அவளை பயிற்சி செய்யுமாறு வேண்டிக்கொண்டார்.

அவளது விளையாட்டுத் துறை பிரவேசம் வெற்றிகரமாக நடைபெற்றது. என்னென்ன போட்டி நிகழ்ச்சிகள் உண் டோ, அத்தனையிலும் போட்டியிடவேண்டும், வெற்றிபெற வேண்டும் என்ற முடிவினைக் கொண்டவள் அல்லவா! ஆகவே, அத்தனைப் போட்டிகளைப் பற்றியும் தெரிந்துகொண்டாள். புரிந்துகொண்டாள். பயிற்சி முறைகளையும் அறிந்து கொண்டாள்.

உலகப் புகழ்பெற வேண்டும், உன்னத சாதனைகளை ஆக்கவேண்டும் என்ற இலட்சியத்தில் அல்லவா இருக்கிறாள்! ஓட்டம், தாண்டுதல், எறிதல் போன்றவற்றில் அதிகப் பயிற்சி செய்ய ஆரம்பித்தாள். மாலை நேரம் பயிற்சிக்குப் போதவில்லை என்று, அவள் இரவு நேரங்களில்கூட தனியாக மைதானம் சென்று பயிற்சி செய்ய ஆரம்பித்தாள். அந்தப் பயிற்சி இரவு 9 மணி வரைகூட நீண்டு செல்லும்.

உண்மையான உழைப்பினால்தான் வெற்றி வந்து கிடைக்கும் என்று நம்பினாள். நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம் பயிற்சி செய்தாள். தன் குறைகளை உணர்ந்தாள். திருத்திக்கொண்டாள். எல்லா நிகழ்ச்சிகளிலும் திறமையை உலகமறியக் கூடிய காலமும் வந்தது.

இதற்கிடையில் அந்தப் பெண்ணின் ஆற்றலைக் கண்டு, ஒரு கம்பெனி, குமாஸ்தா வேலையை தந்தது. மாதம் 75 ஷில்லிங் சம்பளம் பெற்றுக்கொண்டு, கூடைப் பந்தாட்டத்தில் சேர்ந்து விளையாடியும் வந்தாள். அந்தப் பெண்ணின் பெயர் 15 வயது நிரம்பிய மில்ரட் எல்லா டிட்ரிக்சன். ஆர்வத்துடன் வேலையில் அமர்ந்தாள். வேலை கிடைத்ததும் விளையாட்டு வேண்டாம் என்று ஒதுக்கிவிடவில்லை. மேலும் உற்சாகமாக விளையாட்டில் ஈடுபட்டாள்.

5 அடி உயரமும் 105 பவுண்டும் எடையுள்ள பேபி (Baby), (வீட்டிலேயும் நண்பர்களாலும் அப்படித்தான் செல்லமாக அழைக்கப்பட்டாள்) முதன் முதலாக 1928ம் ஆண்டுதான், கூடைப் பந்தாட்டம் ஆடக் கற்றுக்கொண்டு போட்டி ஆட்டத்திலும் கலந்துகொண்டு முதல் தரமாக ஆடி, அதிக வெற்றி எண்களைப் பெற்றுத் தந்தவள் என்ற பெருமையைப் பெற்றாள்.

கூடைப்பந்தாட்டத்தில் அவள் வேலை செய்த கம்பெனியின் குழுதான், நாடெங்கும் நடந்த போட்டிகள் அனைத்திலும் வெற்றி பெற்று வந்தது. அதுவே, அமெரிக்க நாட்டுக் குழுவாகவும் மாறி, நாட்டுக்கும் பெருமை தேடித்தந்தது ஏனெனில், அமெரிக்க நாட்டிலே நடைபெறும் தேசிய

கூடைப் பந்தாட்டப் போட்டியில் 3 ஆண்டுகள் தொடர்ந்தாற்போல், வெற்றி பெறச் செய்து, சிறந்த ஆட்டக்காரி என்ற புகழையும் பரிசையும் தட்டிச் சென்றாள் பேபி.

அந்தப் புகழுடன் போதுமென்று இருந்துவிட மனமில்லை பேபிக்கு. விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு ஒலிம்பிக் சாதனைகளை முறியடிக்க வேண்டும்; தங்கப் பதக்கங்கள் பெற வேண்டும் என்ற இலட்சியத்துடன் தான், மாலையில் வேலைக்குப் பிறகு இரண்டு மணி நேரப் பயிற்சிகள் போதாது என்று, இரவு 9 மணி வரையிலும் பயிற்சிகளைத் தொடர்ந்தாள்.

பயிற்சி எப்பொழுதும் யாரையும் கைவிடுவதில்லை. நீளத்தாண்டும் நிகழ்ச்சியில் 18 அடி 8½ அங்குலம் தாண்டிய முதல் பெண்மணி என்ற புகழைப் பெற்றாள். இதற்கிடையில்தான் 1932ம் ஆண்டு நடக்கப்போகும் ஒலிம்பிக் பந்தயம் நெருங்கிக் கொண்டிருந்தது. அதற்கான வீரர்களையும் தேர்ந்தெடுக்கின்ற நேரமும் வந்தது.

அமெரிக்க நாடெங்கிலும் இருந்து 200க்கு மேற்பட்ட வீராங்கனைகள், ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்புத் தரும் தேர்வினில் கலந்து கொள்ள வந்திருந்தார்கள். ஒவ்வொரு விளையாட்டுக் குழுவும் தங்களது பிரதிநிதிகள் என்று 15 அல்லது 20 வீராங்கனைகளை அனுப்பி வைத்திருந்தன. எம்ப்ளாயர்ஸ் கேஷுவாலிட்டி கம்பெனியிலிருந்து ஒரே ஒரு பிரதிநிதியாக பேபி வந்திருந்தாள்.

ஒவ்வொரு கம்பெனியிலிருந்தும் குழுவிலிருந்தும் வந்திருக்கின்ற வீராங்கனைகளை ஒலிபெருக்கியால் அழைத்து, பார்வையாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் அறிமுகம் செய்து வைக்கின்ற நிகழ்ச்சி நடந்தது. அவள் கம்பெனியார் அனுப்பிய ஒரே ஒருத்தி என்று பேபியை அறிமுகப் படுத்தினார்கள். எல்லோரும் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தனர். அவள் 10 நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளப் போகிறாள் என்றதும், எல்லோரும் இன்னும் ஆவலுடன் பார்த்தனர்! அந்தப் பார்வையில் ஆச்சரியம் மட்டுமல்ல, இகழ்ச்சியும் கலந்திருந்தது.

இந்தப் பெண்ணுல் என்ன செய்ய முடியும் என்று எண்ணியதற்கு மாருக எல்லாமே நடந்தது. எப்படி?

தனியாகப் போட்டிக்கு வந்த பேபி, 10 போட்டிகளில் 8ல் கலந்து கொண்டாள். ஓய்வே இன்றி நாள் முழுதும் போட்டியில் ஓடினுள். உயரத் தாண்டினுள். இரும்புக் குண்டு எறிந்தாள். வேல் எறிந்தாள், இறுதியில் வெற்றி பெற்ற கணக்கைக் கூட்டிப் பார்த்தபொழுது, அங்கு இருந்த அதிகாரிகள் அனைவருமே அயர்ந்து போயினர்.

குழுவாக வந்திருந்த இலினுய்ஸ்குழு 22 வெற்றி எண்கள் மட்டுமே எடுத்திருந்தபோது, எம்பளாயர்ஸ் கேஷீவாலிடி கம்பெனியின் சார்பாக வந்திருந்த பேபி மட்டும் 30 வெற்றி எண்களை எடுத்திருந்தாள். தனி ஒருத்தியாக வந்து, தேசியப் போட்டியில் வெற்றி பெற்று, தன் கம்பெனிக்குப் பெரும் புகழைச் சேர்த்துத் தந்தாள் பேபி டிடிரிக்சன்.

அவளது ஆற்றலையும் சாதனையையும் பற்றிக் குறிப்பிடும் போது, அவளது விளையாட்டு உலகச் சாதனையை இவ்வாறு வரலாற்ருசிரியர்கள் குறித்திருக்கின்ருர்கள். அவள் 634 முறை போட்டிகளில் கலந்து கொண்டும் 632 தடவை வென்றிருக்கிருள். இரண்டே இரண்டு தடவைதான் தன் ஆயுள் காலத்திலேயே தோற்றிருக்கிருள் என்ருல் பாருங்களேன்!

கூடைப் பந்தாட்டப் போட்டியில் ஒரு முறை தோற்றிருக்கிருள். இன்னெருமுறை ஒலிம்பிக் பந்தயத்தில் உயரத் தாண்டும் பொழுது, அதுவும் நியாயமற்ற அநியாய அடிப்படையில் கொடுத்த தீர்ப்பில்.

வேல் எறிதல் போட்டியில், உலகசாதனையும் ஒலிம்பிக் சாதனையும் நிகழ்த்திய பேபி, 80 மீட்டர் தடை தாண்டும் போட்டியில் 11·7 வினுடிகளில் ஓடி உலக சாதனையும் ஒலிம்பிக் சாதனையும் நிகழ்த்தினுள். அடுத்ததுதான் உயரத்தாண்டும் போட்டி. அங்கேதான் அவளது கெட்ட காலம் தலை காட்டிக்கொண்டது அதிகாரிகள் உருவத்திலே.

பேபிக்கும் ஜீன்சீலி என்பவளுக்கும்தான் கடும்போட்டி. இருவரும் 5 அடி 5 அங்குலம் உயரத்தைத் தாண்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். இருவரும் அதனைத் தாண்டி முடித்துவிட்டார்கள். அதுவே உயரத் தாண்டலில் உலக சாதனையாகக் கருதப்பட்டது. அடுத்து, கால் அங்குலம் உயரமாக குறுக்குக்கம்பம் உயர்த்தப்பட்டது. பேபி தாண்டி முடித்து விட்டு வரும்பொழுது, அதிகாரி ஒருவர் குறுக்கிட்டார். அதாவது, பேபி தாண்டுகின்ற முறை, தாண்டும் விதிக்குப் புறம்பானது என்பதாகும்.

அதாவது, அவள் ஒரு காலை ஊன்றித் தாண்டாமல், இரண்டு கால்களையும் ஊன்றித் தாவிக் (Dive) குதித்தாள் என்பதுதான் அதிகாரியின் குற்றச்சாட்டு. அதுபோல், தான் தாண்டவில்லை என்று பேபி பலமுறை முறையிட்டும் அவள் வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தாண்டி முடித்து உலக சாதனை நிகழ்த்திய போதும், ஜீன்சீலிதான் முதலாவது என்று அறிவிக்கப் பட்டாள். பேபி இரண்டாவது இடத்தையே பெறலாயிற்று.

இவ்வாறு இரண்டாவது இடத்தைப் பெற்று, இரண்டாவது முறையாகத் தோற்றாலும், பேபி டிடிரிக்சன் பெற்றிருந்த திறமையும் ஆற்றலும், வேறெந்த வீராங்கனையும் பெற்றதே கிடையாது என்பதற்கு எத்தனையோ வீரநிகழ்ச்சிகளை நடத்திக் காட்டியிருக்கிருள்.

1932ம் ஆண்டில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் நடந்த ஒலிம்பிக் போட்டியில்தான் மேற்கூறிய உலகசாதனைகளை நடத்திக் காட்டியிருந்த பேபி, அந்த போட்டிகளின்போது, பேபி நடந்து கொண்ட விதமே மற்றவர்களை பிரமிக்க வைத்ததுடன், அதிசயப் படவும் செய்தது.

தடைதாண்டும் போட்டி நடைபெறுகின்ற நாளுக்கு முதல்நாள், வீராங்கனைகள் தங்கியிருந்த அறைகள் பக்கம் சென்ற பேபி, ஒரு அறையின் கதவைத் தட்டினுள். பலர் அங்கேயிருந்து பேசிக் கொண்டிருந்தனர். அவர்களைப்